

பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 13, சனிக்கிழமை 27.05.2017 | கதிர் 202


# தெற்கில் பேய் மழை, பெரு வெள்ளம்

# 91 பேர் பலி; 152 பேர் மாயம்!

## 50 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

கொழும்பு, மே 27

தென்னிலங்கையில் ஏழு மாவட்டங்களைக் கடந்த இரண்டு நாள்களாகப் புரட்டிப்போட்டிருக்கும் பேய் மழை, பெருவெள்ளம் மற்றும் மண் சரிவினால் நேற்று மாலை வரை 91 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள்; 152 பேர் காணாமல் போயிருக்கின்றார்கள்.

ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்திருக்கின்றனர். ஐந்து லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பக்கம் 18 >>>

## மீட்புப் பணியில் முப்படை அணிகள்!




கொழும்பு, மே 27

தென்னிலங்கையில் மிக மோசமான மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முப்படையினரும், பொலிஸாரும் 24 மணி நேர மீட்புப் பணிகளில் களமிறக்கப்பட்டிருக்கின்றனர் என அரசு அறிவித்துள்ளது.

எண்ணூறு

பக்கம் 18 >>>



## வட, கிழக்கில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 27

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 80 கிலோ

பக்கம் 18 >>>

## கரை உடைத்து ஓடும் கங்கைகள்

கொழும்பு, மே 27

கடும்மழைகாரணமாக தெற்கில் பல ஆறுகள் பெருக்கெடுத்து, கரை

பக்கம் 18 >>>

## உண்மையான சமஷ்டி அரசமைப்பு ஐக்கிய இலங்கையை உருவாக்கும்

### அதற்கு உழைக்க முதலமைச்சர் விக்கி வேண்டுகோள்



யாழ்ப்பாணம், மே 27

எங்கள் நாட்டுக்கு உண்மையான சமஷ்டி அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதன்மூலம் ஐக்கிய இலங்கையை ஏற்படுத்துவதற்கு உழைக்குமாறு அனைவரையும் அழைக்கிறேன்.

-இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதல்

பக்கம் 18 >>>

## இனவாதமே இல்லாத நாட்டை கட்டியெழுப்ப மங்கள அழைப்பு



எமக்கு இடையில் இன நல்லிணக்கம் முக்கியமானது. நாட்டில் இன்று பலர் இனவாதக் கருத்துகளைப்பேசுகின்றனர். சிங்கள இனவாதமோ, முஸ்லிம் இனவாதமோ, தமிழ் இனவாதமோ இல்லாத நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 >>>

## கன மழை தொடரும்

கொழும்பு, மே 27

இலங்கையின் தென் பகுதி மாகாணங்கள் பலவற்றில் அடுத்த 48 மணித்தியாலத்தில் 150 மில்லிமீற்றருக்கு (சுமார் ஆறு அங்குலத்துக்கு) அதிக

பக்கம் 18 >>>

## அவசர உதவி கோருகிறது இலங்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலைப் பாதிப்பிலிருந்து மக்களைமீட்பதற்காக ஐ.நா..

பக்கம் 18 >>>

## போக்குவரத்தும் பெரும் பாதிப்பு

கடும் மழை காரணமாக தெற்கில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியமையால் அங்கு பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. வீதிகளில்

பக்கம் 18 >>>

## இந்தியக் கப்பல் விரைந்து வருகிறது

இலங்கையின் கோரிக்கையை அடுத்து நிவாரணப் பொருள்களோடு இந்திய உதவிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு விரைவதாகக் கூறப்பட்டது. (உ)

## கன மழைக்கு மத்தியில் ஞானசாரருக்கு வலை வீச்சு!

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் பொதுபல சேனாஅமைப்பின்பொதுச் செயலாளர் கலகொட

பக்கம் 18 >>>

## பரீட்சை ஒத்திவைப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் காரணமாக நாளை 28 ஆம் திகதி நடைபெற விருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை

பக்கம் 18 >>>




தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல்
The Distinctive Voice of The Tamil Speaking People

# பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க உடனடி நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, மே 27


நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் உரிய அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிவாரணம் வழங்குவதற்காக எந்தத் தடையும் இன்றி நீதி ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ரணில் அவசரப் பணிப்பு



**கட்சித் தலைவர்கள் அவசர கூட்டம்**

கடும் மழையின் காரணமாக பலபிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கான கட்சித் தலைவர்களின் கூட்டம் நாடாளுமன்றத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடர் நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்தினர்.

இதற்கமைவாக சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கட்சித் தலைவர்களின் கூட்டம் நடத்தப்பட்டது.

கடும் மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு 2003 ஆம் ஆண்டிலும் பார்க்க மிக மோசமான பாதிப்பாகும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

**அனர்த்தத்தையடுத்து முக்கிய தீர்மானங்கள்**

காலி நெலுவ நகரத்தில் அதி கூடிய மின்னழுத்த கட்டமைப்புக்கு மேலாக நீர்மட்டம் அதிகரித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

மீன்பிடி வள்ளங்களை அருகிலுள்ள பொலிஸ் அல்லது பாதுகாப்பு தலைமையகத்திடம் ஒப்படைத்து மக்களை மீட்டெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் கடற்றொழில் சமூகத்திடம் கேட்டுக்கொண்டார். இதற்குக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

**காலியில் மீட்புப்பணியில் ஈடுபட்ட ஹெலி விபத்து**

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஹெலிகொப்டர் ஒன்று காலி, நெலுவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி உடைந்து விழுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பலர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டிருந்தவர்களை மீட்பதற்காக பெல் 212 மற்றும் எம்.ஐ. 17 ரக ஹெலிகொப்டர்கள் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**முப்படையினரும் களத்தில்**

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக முப்படையினரும் களத்தில் குதித்துள்ளனர்.

காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதுதவிர, கடற்படையினரும் இந்த பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நெலுவ, மொரவக்க, கம்புறுபிட்டிய போன்ற பிரதேசங்களில் 4 படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்துக்கு ஒரு படகும், களுத்துறை, கலவானை பிரதேசங்களுக்கு 2 படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பரீட்சைகள் திணைக்கத்தால் இன்றும், நாளையும் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவிருந்த சகல பரீட்சைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

**பரீட்சைகள் யாவும் ஒத்திவைப்பு!**

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பரீட்சைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

ஏற்கெனவே, இன்று நடைபெறவிருந்த பொது நிர்வாக சேவை பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**அரச ஊழியர்களது விடுமுறைகள் ரத்து!**

நாட்டின் தற்போதைய இயற்கை அனர்த்த நிலையால், உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரது விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர்கள் அனைவரும் உடனடியாக சேவைக்குத் திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

யாரேனும் அரச அதிகாரி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பணிக்குச் சமூகமளிக்க முடியாத நிலையில், அவருக்குப் பதிலாக மற்றொருவர் கடமையாற்ற வரவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதவளப் பற்றாக்குறை ஏற்படுமிடத்து ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளைத் தற்காலிகமாகப் பணிக்கமர்த்துவதற்கான முழு அதிகாரமும் பாதிக்கப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை தப்பிக் கொள்ள இடமளிக்கக் கூடாது

## ஆஸ்திரேலிய அரசைக் கோரியது அந்த நாட்டு அகதிகள் பேரவை

கொழும்பு, மே. 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்கு ஆஸ்திரேலிய அரசு இடமளிக்கக் கூடாது என அந்த நாட்டு அரசிடம் ஆஸ்திரேலிய அகதிகள் பேரவை கோரியுள்ளது.

ஆஸ்ரேலிய அரசின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு சென்றுள்ளார். இந்த நிலையிலேயே, ஆஸ்திரேலிய அகதிகள் பேரவை இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இலங்கையில் போர் உக்கிரமாக நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் இறுதிக் கட்டத்தில், இலங்கை அரசின் பதில் பாதுகாப்புச் செயலராகச் செயற்பட்டவர் மைத்திரிபால சிறிசேன. இந்தக்காலப் பகுதியிலேயே அதிகளவான தமிழ் மக்கள் அரச படைகளால் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியாக 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்று கொண்டதன் பின்னரும், இலங்கையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்கின்றது. இலங்கை அரசுடன், ஆஸ்திரேலிய அரசு நெருக்கமான உறவைப் பேணுகின்றது. இலங்கை அரசின் துன் புறுத்தல்களில் இருந்து தப்பிவருகின்ற தமிழ் அகதிகளை ஆஸ்திரேலிய தனது நாட்டுக்குள் அனுமதிக்க மறுக்கின்றது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆஸ்திரேலியாவுக்கு 2011 ஆம் ஆண்டு வருகை தந்த போது அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க முற்பட்ட போதும், ஆஸ்திரேலிய சட்டமா அதிபர் தடுத்து விட்டார். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்படுகின்றபோது அவ்வாறு தடுக்க முற்படக்கூடாது என்று கோரிக்கை விடுகின்றோம் என்று பேரவை மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

# நீரோட்டங்களுக்குத் தடையாகவுள்ள கட்டடங்கள் துரிதமாக இடிக்கப்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 27

ஆறுகள் மற்றும் கால்வாய்களின் நீரோட்டங்களுக்குத் தடையேற்படுத்தும் வகையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், சம்பந்தப்பட்ட நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு தெளிவுப்படுத்தப்பட்ட பின்னர் துரிதமாக இடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து காணிகளை நிரப்பும் மற்றும் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

கனமழை காரணமாக களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. கொழும்பில் பெய்த கனமழை காரணமாக கொழும்பு நகர், கொலன்னாவ, வெத்தலை, களனி ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆறுகள் மற்றும் கால்வாய்களின் நீரோட்டங்களைத் தடுக்கும் வகையில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களே இதற்குக் காரணம் என்று பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது. இதேவேளை, பொதுமக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# காணாமற் போனோர் தொடர்பான தகவல்களைப் பெற முடியவில்லை

## கைவிரித்தது ஜனாதிபதி செயலகம்

முல்லைத்தீவு, மே 27

காணாமற்போனோர் தொடர்பானவிவரங்களைப்பெறமுடியவில்லை என ஜனாதிபதி செயலகம் கைவிரித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி செயலகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் கடந்த 80 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தமது உறவினர்கள் தொடர்பான விபரங்களை அறிவதற்கு முயன்றனர்.

அதன் அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மற்றும் மே மாதம் 9 ஆம் திகதி ஆகிய இரு தினங்களும் 227 விண்ணப்பங்களை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் சமர்ப்பித்தனர். அந்தவிண்ணப்பங்களை மாவட்டச் செயலகம் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்தது.

அதற்கான பதிலை ஜனாதிபதிசெயலகமேலதிகசெயலாளர் அனுப்பிவைத்துள்ளார். குறித்த விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களைப் பெறமுடியாத காரணத்தால்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன என அந்தப் பதிலில் கூறப்பட்டுள்ளது.

மேலும், தகவல் அறியும் சட்டம் 31டுன் பிரகாரம் மேன் முறையீடு ஒன்றினை 14 நாள்களுக்குள் செய்ய முடியும் எனவும் அந்தப் பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதிலால் காணாமற்போனோரின் உறவுகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். ஜனாதிபதிசெயலகமே இவ்வாறு பதிலளித்தால் இனிமேல் தாங்கள் எங்கு செல்ல முடியும் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-81)

# இந்தியப் பிரஜைகளுக்கு யாழில் கலந்துரையாடல்

யாழ். இந்திய துணைத் தூதரகமானது வடமாகாணத்தில் வசிக்கும் அல்லது பணிபுரியும் இந்தியப் பிரஜைகளுக்குத் தனது சேவைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 03 ஆம்திகதிசனிக்கிழமைமுற்பகல் 11மணிமுதல் நண்பகல் 12மணி வரை இல. 14, மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது விசா, கடவுச்சீட்டு, இந்தியவெளிநாட்டுப் பிரஜாவுரிமை, மற்றும் தூதரக சேவைகள் உள்ளடங்கலான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அக்கறையுள்ள வடமாகாணத்தில் வசிக்கும் அல்லது பணி புரியும் இந்தியப் பிரஜைகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இந்தியத்துணைத்தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

# அரச அலுவலர்கள், பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் இரத்து

## மக்களுக்குப் பணியாற்ற அவர்களுக்கு அழைப்பு

நாட்டில் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டுள்ளபிரதேசங்களிலுள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனஅரசாங்கம்அறிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் இடங்களில்வசிக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது அரச உத்தியோகத்தர்களின் பணியாகும்எனபொதுநிர்வாகசேவைகள் அமைச்சின் அவசர சுற்றுநிருபம் அறிவுறுத்தியுள்ளது.


தேவைப்படின் மக்களை இடைத்தங்கல்முகாம்களில்தங்க வைக்குமாறும் அந்தச் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனப் பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவசர சுற்றுநிருபமொன்றை அவர் அனைத்துப்பொலிஸ்நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தற்போதைய நிலையில் மீட்புப் பணிகள் மற்றும் சட்டம், ஒழுங்கைப்பாதுகாப்பது தொடர்பில் பொலிஸாருக்கு முக்கிய பங்கு இருப்பதால் மறு அறிவித்தல் வரும் வரை அனைத்துப் பொலிஸாரின்விடுமுறைகளும் இரத்துச் செய்யப்படுகின்றன எனஅவர் அறிவித்துள்ளார். (ம)

# வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியுள்ள காணியை படையினர் விடுவிப்பர்



கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சியில் யுத்த காலத்தில் வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கி அமைந்திருந்த காணியை விடுவிப்பதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளது. அதன்படி, எதிர்வரும் 30 ஆம்திகதி அந்தக் காணியை விடுவிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகக்கூறப்படுகின்றது.

இறுதி யுத்தத்தின்போது மேற்படி நீர்த்தாங்கியை தமிழீழ விடுதலைப்புலிகள் குண்டுவைத்துத் தகர்த்தனர் என்று கூறிய படையினர், புலிகள் அழிவுகளையே செய்தனர் என்றும் அவர்கள் பயங்கரவாதிகள் என்றும் சர்வதேச சமூகத்திற்குஎடுத்துக்காட்டுவதற்காக மேற்படி தாங்கியை யுத்த நினைவுச் சின்னமாகப் பாதுகாத்து வந்தனர்.

கிளிநொச்சி நகரில் ஏ-9 பிரதான வீதிக்கு அருகில் உள்ள மேற்படி நீர்த்தாங்கியை யுத்தம் முடிந்தவுடன் தமது உச்சக்கட்டப் பிரசாரத்திற்காகப் படைத்தரப்பு பயன்படுத்தி வந்தது. படையினர் தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் அதைக் காண்பித்து அது தொடர்பாக விளக்கமளித்தனர்.

யுத்த காலத்தில் படைத்தரப்பு பாரிய அழிவுகளைமேற்கொண்ட போதிலும் அவை தற்போது பூசி மெழுகப்பட்டுள்ள நிலையில், விடுதலைப் புலிகளினால் வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியை மட்டும் யுத்த அழிவுச் சின்னமாக பேணியமை தமிழ்மக்கள் மத்தியில்கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் இடம்பெற்ற பல கூட்டங்களிலும் இது தொடர்பில் எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி அந்த நீர்த்தாங்கிஉள்ளநாற்பதுபேர்ச்காணி படைத்தரப்பால் கரைச்சி பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளது. பிரதேச செயலகம் அதை தேசிய நீர் வழங்கல் மற்றும்வடிகால்அமைப்புச்சபையிடம் கையளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)



தெல்லிப்பழை சித்தியம்புளியடி கலைச்செல்வி சனசமூக நிலையம் நடாத்திய கலைச்செல்வி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று இடம்பெற்றபோது, மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மாணவன் ஒருவனுக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வடக்கின் அபிவிருத்திக்கு நிதி வேண்டாம்; மக்களின் பிரச்சினைக்கு தீர்வே அவசியம்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை



மன்னார், மே 27

"வடமாகாண அபிவிருத்திக்கு பாரியளவுநிதிவேண்டாம். காணாமற்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும். சிறைகளில் உள்ள கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். பொது மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும். இதுவே இப்போது எம் மத்தியில் உள்ள முக்கியமான பிரச்சினைகளாகும்"

– இவ்வாறு தெரிவித்தார் வடக்குமாகாணமீன்பிடிமற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

அரசைத் தொடர்ச்சியாகக் குறை சொல்லிக்கொண்டிருக்காமல் அவர்கள் செய்கின்ற நல்லவிடயங்களையும்வெளியே கூறவேண்டும்என்றுதெரிவித்த அவர், இந்த அரசு வடக்கில் பல மினிமுகாம்களை அகற்றிபடையினரைபிரதானமுகாம்களுக்கு மாற்றியுள்ளது எனவும் கூறினார்.

குறிப்பாக, வடமாகாணத்தில் நாயாறு, இலுப்பைக்கடவை, முழங்காவில், நாகபடுவான் போன்ற இடங்களில் உள்ள இராணுவமினிமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. இதேபோல் வடக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களிலும் மினி முகாம்கள் அகற்றப்பட்டிருக்கின்றன எனவும் அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் மன்னார் உப அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னைய அரசில் அமைச்சுப்பதவியில் இருந்த அமைச்சர் ஒருவர், காணி விடுவிப்பு விடயத்தில் தொடர்ச்சியாக அரசைக் குற்றம்சுமத்திவருகின்றார். அது போல ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் அரசைக் குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால், அந்த முன்னாள் அமைச்சர், தாம் அமைச்சராக இருந்தபோது எதைச் சாதித்தார் என்பதைத் திரும்பிப் பார்க்க வேண்டும். ஒரு துண்டு காணியையாவது மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தாரா என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

என்னை பொறுத்தவரை வடமாகாணம்பூராகவும், குறிப்பாக மன்னார் மாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்குச் செல்லும் வழியில் பல மினி முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. இன்னும் சில முகாம்கள் அகற்றப்பட வேண்டி உள்ளன.

எனவே, முழுப் பூசணிக்காயை ஒரு பீங்கான் சோற்றுக்குள் புதைப்பது போன்று கதை கூறக்கூடாது. அரசு நல்லதைச் செய்தால் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைவெளிப்படுத்த வேண்டும். அவற்றுக்காக நன்றி கூறவேண்டும்.

இதுவரை மக்கள் மேற்கொண்ட போராட்டங்களால் அரசு சில காணிகளை விட்டுக் கொடுத்திருக்கின்றது. அதே போல், மக்களின் எஞ்சிய காணிகளையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

– என்றார். (ம-112)

# நமது பார்வை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தவறான புரிதல்கள்...!

வல்வெட்டித்துறையில் ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக அமைக்கப்படவுள்ள நீச்சல் தடாகத்துக்கு அடிக்கல் நடும் வைபவம் நேற்றுக் காலை இடம்பெற்றபோது, அங்கு உரையாற்றிய வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், அந்த உரையின் கடைசியில் - இறுதியில் - முத்தாய்ப்பாகக் கூறிய கருத்துக்கள் இன்றைய நிலையில் மிக முக்கியமானவையாகும்.

*"எம்மிடையே வேற்றுமை இல்லை. மாறாகச் சிந்தனைத் தெளிவு உண்டு. இந்த நாட்டில் காணப்படுகின்ற வேற்றுமை உணர்வுகளும் சச்சரவுகளும் அரசியல்வாதிகளாலும் பிற்போக்குச் சிந்தனையாளர்களாலும் விதைக்கப்பட்ட ஒரு நச்சு விதையாகும். இதனை இல்லாதொழிப்பதற்கு அரசு முன்வரவேண்டும். அது, இப்போதைய கூட்டுக் கட்சி அரசாங்கத்தினால்தான் முடியும். இதற்காக நாம் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து முன்னெடுக்க வேண்டும்.*

*"உண்மையான சமஷ்டி அரசமைப்பைக் கொண்ட ஐக்கிய இலங்கை ஒன்றுக்காக நாம் அனைவரும் உழைப்போமாக!"*

- மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

இந்த நாட்டு மக்களிடையே வேற்றுமை இல்லை, சிந்தனைத் தெளிவு உண்டு, அரசியல்வாதிகளும், பிற்போக்குவாதிகளும் விதைத்த நஞ்சு விதைகளால்தான் எமது இலங்கைத் தீவில் வேற்றுமை உணர்வுகளும், சச்சரவுகளும் ஏற்பட்டிருக்கின்றன என்று அவர் கூறுகின்றமை மிக மிகப் பொருத்தமானது.

அந்த உரையில் அவர் தெரிவித்த இன்னொரு விடயமும் நோக்கற்பாலது.

*"மற்றவர்கள் பற்றிய தகவல்களை நாம் மூன்றாவது தரப்புக்கு ஊடாகப் பெற்றுக் கொள்கிறோம். அதனால்தான் பிழையான புரிதல்கள் ஏற்பட்டு விடுகின்றன"* என்ற சாரப்பட விடயங்களை அவர் முன்வைக்கின்றார்.

நமது நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு மட்டுமல்ல, இங்கு எமது உட்கட்சிப் பிரச்சினைகளுக்கும் கூட, இந்த மூன்றாம் தரப்பு ஊடாக மற்றவரைப் படித்தல் அல்லது மற்றவரைப் புரிதல் காரணமாகி விடுகின்றது.

வண.ஞானசாரரைக் கைது செய்வதாயின் அதற்கு முன்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைக் கைது செய்ய வேண்டும் என்று பொதுபலசேனாவின் பேச்சாளர் கூறுகின்றார் என்றால், அதற்கும் காரணம், முதல்வர் விக்னேஸ்வரனையும் அவரது நிலைப்பாட்டையும் பொதுபலசேனாவும் சிங்கள மக்களும் கூட சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. மூன்றாம் தரப்பு ஊடாகத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என்பதுதான்.

இப்போதும் கூட, வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும், அவரை அந்த முதல்வர் பதவிக்கு கொண்டு வந்து அமர்த்த வேண்டும் என்று ஒரேயடியாக - விடாப்பிடியாக - பிடிவாதமாக - நின்று, அவரை கொண்டு வந்து அமர்த்தி 'அழகு பார்த்த' கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் இடையில் இப்போது முரண்பாட்டு நிலைமை உள்ளது என்பது போலவும், இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி தொடர்பில் இருவருக்கும் இடையில் கருத்தியல் ரீதியான முரண்பாடுகள் ஆழமாக நீடிக்கின்றன என்ற மாதிரியுமான புரிதல் நம் மத்தியில் அதிகமாக உண்டு.

அது கூட, பத்திரிகைகளால், அவற்றின் பத்திகளால் உருவாக்கப்பட்ட தவறான புரிதலாக இருக்கலாம்.

ஏனென்றால், மேற்படி நிகழ்வில் நீதியரசர் விக்னேஸ்வரன் கூறிய கருத்தியல் ரீதியான சிந்தனையைத்தானே இப்போது தன் நிலைப்பாடாகக் கொண்டு சம்பந்தன் இயங்குகின்றார்...! அப்படி இருக்கும்போது அவர்களுக்கு இடையில் என்ன முரண்பாடு? என்ன இடைவெளி?

*"எமக்கிடையேயான (இனங்களுக்கு இடையேயான) வேற்றுமைகளையும் சச்சரவுகளையும் இல்லாதொழிப்பது இந்தக் கூட்டுக் கட்சி அரசினால்தான் முடியும்"* என்றும் -

*"உண்மையாக சமஷ்டி அரசமைப்பைக் கொண்ட ஐக்கிய இலங்கை ஒன்றுக்காக நாம் அனைவரும் உழைப்போம்"* என்றும்-

நீதியரசர் விக்னேஸ்வரன் கூறுகின்ற விடயங்களைத் தானே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தன்னுடைய கருத்தியல் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

ஆகவே, ஒத்த கருத்து நிலைப்பாட்டை இந்தத் தலைவர்கள் இருவரும் கொண்டிருக்கின்றமையால், அவர்களுக்குள் நிச்சயம் சரியான புரிதல் இருக்கும்.

முதல்வர் சுட்டிக்காட்டுகின்றமைபோல, மூன்றாம் தரப்புகள் ஊடாக இந்த இருவரையும் பற்றிய தகவல்களை நாம் அறிந்து கொள்வதால், எங்களுக்கு ஏற்பட்டிருப்பதும் தவறான புரிதல்தான், அந்தப் புரிதல்தான் இந்த இருவருக்கும் இடையில் கருத்தியல் முரண்பாடு பூதாகரமாகியுள்ளது என்ற தகவல் எனக் கொள்வோம்.

இந்த இரு தலைவர்களும் நல்ல புரிந்துணர்வு நிலையில் இருக்கிறார்கள் என்பதும் -

தமிழ் மக்களாகிய நாங்கள்தான் மூன்றாம் தரப்பு ஊடாகத் தரப்படும் தகவல்கள் மூலம், இந்த இருவர் குறித்தும், அவர்களுக்கு இடையிலான உறவு நிலை குறித்தும் தவறான புரிதல்களைச் சுமந்து கொண்டுள்ளோம் என்பதும் - உண்மையானால், அது நல்லதுதான்.

இருவருக்கும் இடையில் கருத்தியல் ரீதியான புரிந்துணர்வும் இணக்கமும் இருக்குமானால், தமிழர் தரப்புக்கு அது மிகவும் நல்ல சமிக்ஞை. ஆரோக்கியமான பல நகர்வுகளுக்கு மிக ஆரோக்கியமான பலன்தரும் விடயமாகவும் இருக்கும்.

# சர்வதேச கடன்களுக்குப் பதிலாக அந்நிய முதலீட்டை அதிகரிக்கலாம்

## வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்ற ரவி தெரிவிப்பு



கொழும்பு, மே 27

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அந்நிய முதலீடுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தின் மூலம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் புதிய அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ள அமைச்சர், நேற்றுமுன்தினம் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக இதுவரை காலமும் சர்வதேச கடன்களைப் பெற்றுக் கொள்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட்டு, கடன்களுக்குப் பதிலாக அந்நிய முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பில் ஆர்வம் காட்ட வேண்டும்.

பொருளாதார நிலையில் எம்மை முந்திச் சென்றுள்ள ஜப்பான், வியட்நாம் போன்ற நாடுகள் இந்த வழிமுறையையே பின்பற்றிக் கொண்டிருக்கின்றன. இதனையே நாம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

எமது இராஜதந்திர சேவையும் வர்த்தக நோக்குடனான இராஜதந்திரசேவையாக மாற்றம் பெற்று நாட்டுக்கு அந்நிய முதலீடுகளைத் தருவிக்கும் நோக்கில் செயற்படுத்தப்பட வேண்டும்.-என்றார். (எ)

# மீள வேலைநிறுத்தத்தில் குதிக்கும் ரயில்வேத் தொழிற் சங்கங்கள்!

ரயில்வேத் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியால வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளன என்று ரயில்வேத் தொழிற்பாட்டு கண்காணிப்பு அதிகாரிகளின் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைப்பாளர் லால் ஆரியரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்பள நிர்ணயத்தை மீள் நிர்மாணம் செய்தல் மற்றும் ஓய்வூதியம் பெறும் வயதெல்லையை 63 வயது வரை அதிகரிக்குமாறு கோரியே ரயில்வேத் தொழிற்சங்கங்கள் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளன.

இந்த பணிப்புறக்கணிப்புக்கு ரயில் சாரதிகள், நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோர் ஆதரவு வழங்கவுள்ளனர். -என்றார்.

இதேவேளை, கடந்த 5ஆம் திகதி 'சைட்டம்' எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் இணைந்து ரயில்வேத் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்திருந்தன.

இதன் காரணமாக நாட்டில் ரயில் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி நள்ளிரவு முதல் 24 மணிநேர போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக ரயில்வேத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளமை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். (எ)

# உதவி ஆசிரியர் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு!

கொழும்பு, மே 27

நாடளாவிய ரீதியில் உள்ள அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவும் பெப்ரவரி மாதம் முதல் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சகல கல்வி அலுவலகங்களுக்கும் சுற்றிக்கை மூலமாக அறிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கல்வி அமைச்சின் இந்தத் தீர்மானத்துக்கு அமைய நாடளாவிய ரீதியில் உள்ள 4 ஆயிரத்து 665 ஆசிரிய உதவியாளர்கள் நன்மையடையவுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி அமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைய அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆசிரிய உதவியாளர் தொடர்பாக பின்வரும் தீர்மானத்தை அமைச்சரவை எடுக்க உள்ளது.

அதன்படி எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனங்களை வழங்குவதில்லை. தற்போதுள்ள 4 ஆயிரத்து 665 ஆசிரிய உதவியாளர்களுக்கும் ஆசிரிய கலாசாலைகளில் உள்ள வசதிகளை கொண்டு சேவைக்காகபயிற்சிகளைவழங்குதல், ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற அரச சேவையில் 10 வருடம் கட்டாயம் என்பதால் ஆசிரிய பயிற்சியின் போது வயது அதிகரித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கல் ஆகியன மேற் கொள்ளப்படவுள்ளன.-என்றுள்ளது. (எ)

# பாலர் பகல் விடுதி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை

கோப்பாய், மே 27

கோப்பாய் சமூக சேவா சங்கத்தால் நடத்தப்படும் பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் எ.ஆனந்தராசா கலந்து கொள்வார். (ச)

# திக்கத்தில் நாளை குருதிக் கொடை

அல்வாய், மே 27

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)




## நாளை

28.05.2017

ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை மு.இ 8.16 வரை

திதி : திருதியை மு.இ 7.02 வரை

சுபநேரம் : 8.52 - 10.22 வரை

இராகுகாலம் : 4.22 - 5.20 வரை

# நாட்டை அராஜக நிலைக்குத் தள்ள கங்கணம் கட்டியுள்ளன தீயசக்திகள்!

## சட்டம், ஒழுங்கு பேணப்பட வேண்டும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 27

நாட்டில் மீண்டும் அமைதியைக் குழப்பி நாட்டை அராஜக நிலைக்குத் தள்ளிவிடும் ஒரு முயற்சியில் சில தீய சக்திகள் கங்கணம் கட்டி இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சட்டம் ஒழுங்கை பேணுவதில் பொலிஸாரும், பாதுகாப்புத் தரப்பும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதே சிறுபான்மை மக்களின் கோரிக்கையாகும்.

- இவ்வாறு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் பள்ளிவாசல்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சில இனவாதச் சக்திகள் சட்டத்தைக் கையிலெடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருப்பதையே தொடர்ந்து பார்க்க முடிகிறது.

கலவரங்களையும், வன்முறைகளையும் தோற்றுவிப்போருக்கு எதிராக உடனடி நடவடிக்கைஎடுக்கும்பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது.

சிறுபான்மைச் சமுகங்களை ஆத்திரமூட்டச் செய்து தமது இலக்கை அடைவதற்கே இனவாதச் சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதற்குத்தீனிபோடுவதற்கு மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் சக்திகளும் தயாராகவே இருக்கின்றன. இதனை கடந்த சில நாள்களில் நன்றாக அவதானிக்க முடிந்துள்ளது.

### இனக் கலவரத்தை தோற்றுவிக்கும் முனைப்பு

சிங்கள - முஸ்லிம் கலவரமொன்றைத் தோற்றுவிக்கும் முனைப்பிலேயே இனவாதச் சக்திகள் உள்ளன.

கடந்த சில வாரங்களாக சிறுபான்மையினரை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் அடாவடித்தனங்கள், பள்ளிவாசல் தாக்குதல், வர்த்தக நிலையங்கள் மீதான தீவைப்புச்சம்பவங்கள்தொடர்பாக பொலிஸாரால் ஒருவரைத் தானும் கைது செய்யமுடியவில்லை.

இது ஏன் என்ற கேள்விக்குக் கூட மௌனமே பதிலாகக் கிடைக்கிறது.

பௌத்த சிங்களவர்களின் நலனை மட்டும் பேணுவதன் மூலம் தமது அரசியல் இலக்கை அடைவதில் ஒரு கட்சி தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றது.

இனவாதச் சக்திகளுக்கு தீனி போட்டு வளர்ப்பதில் அந்தக் கட்சி ஆர்வமுடன் செயற்பட்டு வருகின்றது. இது ஒன்றும் மூடி மறைக்கப் படக் கூடிய சங்கதியல்ல.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், அமைதியைச் சீர்குலைத்தால் யாராக இருப்பினும் பாரபட்சமின்றித் தண்டிக்கப்படுவரென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆஸ்திரேலியாவிலிருந்து அறிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியா சென்றிருக்கும்ஜனாதிபதி, பல்வேறுபட்ட வேலைப்பளுவுக்கு மத்தியிலும் நாட்டில் இன்று பற்றி எரியும் இனவாதத் தீயை அணைப்பதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்.

ஆஸ்திரேலிய விஜயத்தின் போது அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் நாட்டு நிலைமைகள் தொடர்பாக அவசரக் கூட்டமொன்றை நடத்தி கடுமையான உத்தரவுகளை அவர் பிறப்பித்திருக்கிறார்.

### மைத்திரி ரணில் இருவரும் கடும் உத்தரவு

இதன் மூலம் நாடு எந்தளவுக்கு பாரதூரமான சவாலுக்கு முகம் கொடுத்திருக்கின்றது என்பதை ஊகித்துணரலாம்.

இதேபோன்றுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்புத் தரப்பு மற்றும் பொலிஸாருக்குக் கடும் உத்தரவுகளையும், பணிப்புரைகளையும் விடுத்திருக்கிறார்.

அதேசமயம் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேணத் தவறினால்நாட்டின்எதிர்காலம் கேள்விக்குறியாகலாமென அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் எச்சரித்திருக்கிறார்.

தமது அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக சிறுபான்மைச் சமூகங்களை பகடைக்காய்களாக பயன்படுத்ததீய அரசியல் சக்திகள் முனைவதாக அவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

முஸ்லிம் சமூகத்தின் மீதான இந்த இனவாத செயற்பாடுகளை அரசியல் சக்திகள் உள்ளும் புறமுமாக நின்று தமது சுயநல அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்வதையும் அவதானிக்க முடிகிறது.

சில கட்சிகள் நியாயத்தின் பக்கம் நின்று நேர்மையாக குரல் கொடுக்கின்ற போதிலும் பெரும்பான்மையானவர்கள் இதனை தமது அரசியல் சுயநலனுக்கே பயன்படுத்த முனைவதை அவர்கள் விடுக்கும் அறிக்கைகளே காட்டிக் கொடுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

மூத்த ஊடகவியலாளரும், அரசியல் விமர்சகரும் மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவருமான விக்டர் ஐவன் முஸ்லிம்கள் விடயத்தில் கரிசனை காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகம் திட்டமிட்டு தாக்கப்படுகின்றது. அவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இவ்வாறு அடக்குமுறைக்கு ஆளாகின்றனர்.

முஸ்லிம்களும் இந்த நாட்டு மக்களே. பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு உள்ளஅனைத்துஉரிமைகளும் முஸ்லிம்களுக்கும் உரித்துடையவையாகும்.

இந்த மண் முஸ்லிம்களுக்கும் சொந்தமானதாகும். இதனை மறுக்க எவருக்கும் உரிமை கிடையாது என்பதை அவர் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளார்.

இனவாதத் தீயில் நாட்டை மூழ்கடிக்க இடமளிக்கவும் கூடாது. அரச உத்தரவுக்கு அமைய பாதுகாப்புத் தரப்பும், பொலிஸாரும் தமது கடமையை சரிவரச் செய்ய வேண்டும். பாரபட்சம் பார்க்கக் கூடாது. 1958 இல் நடந்த கலவரத்தின் போது படையினர் கடமையை சரிவரச் செய்ததை மறுந்து விட முடியாது.

ஆனால் 83 இல் படைத் தரப்பு சிங்களவர் பக்கம் நின்றது. 2014 தர்கா நகர் தாக்குதலில்மௌனம்காத்தனர்.ஆனால் மறைமுகமாக இனவாதிகளுக்கு ஒத்துழைத்தனர்.

அதே பாணியில்தான் சில நாள்களாக நடக்கும் நிலைமைகள் காட்டுகின்றன. அரசு இனியும் இதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறினால் நாட்டின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக மாறிவிடும். (ஐ)

---

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இரண்டு வருடங்களுக்கே

## உலக தொழிற்சங்க இலங்கை குழு உதவித் தலைவர் கூறுகிறார்

தற்போது இலங்கைக்கு கிடைத்துள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மூலம் கிடைக்கும் பிரதிபலனின் நூற்றுக்கு 50 வீதத்தை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு வாக்குறுதியளிக்கப்பட்டது. அது இப்போது பிரச்சினையாகி உள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் இரண்டு வருடங்களில் ஜி.எஸ்.பி. பிளஸ் இல்லாது போகும் அபாயம் உள்ளது.

இவ்வாறு உலக தொழிற்சங்கத்தின் இலங்கை குழுவின் உதவித் தலைவர் அன்ரன் மாகஸ் கூறினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் கூறினார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் பெறுவதற்காக தொழிற்சங்கம் என்ற வகையில் தான் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகத் தலையீடு செய்தனர் என்றும் இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இதனை மேற்கொண்டனர் என்றும் அவர் இங்கு கூறினார்.

அத்துடன் அதன் பிரதிபலன்களை தொழிலாளர்களுக்கு வழங்குவதாக தொழிற்துறை அமைச்சர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

---

# போரால் இடம்பெயர்ந்த மக்களின் சொத்து விவரம் எம்மிடம் இல்லை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

போரின்போது இடம்பெயர்ந்த மக்களின் சொத்துக்கள் தொடர்பான எந்த விவரங்களும் எங்களிடம் இல்லைஎன்றுமீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின் போது, யுத்தத்தின் பின்னர் அகதி முகாம்களில்தஞ்சமடைந்தமக்களின் சொத்துக்கள் எங்கேனும் வைப்பீடு செய்யப்பட்டதா என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரின் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த சுவாமிநாதன் -

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்னர், வடக்கு கிழக்கு மக்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அவ்வாறு தங்க வைக்கப்பட்ட மக்களின் சொத்துக்கள் குறித்து எந்தவிதமான தகவல்களும் எங்களிடத்தில் இல்லை.

இதேவேளை, வடக்கில் குறிப்பாக முள்ளிவாய்க்கால் போர் முடிந்த பின்னர் அகதிகளாக வெளியேறியவர்கள் வவுனியாவில் தான் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அங்கு தங்க வைக்கப்பட்டவர்களின் நகைகள், சொத்துக்கள் போன்ற எந்தவிதமான தகவல்களும் வவுனியா பிரதேச செயலகத்திலும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

---

# தனிப்பட்ட முறையில் நடக்கும் குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கப் போதிய சட்டங்களில்லை!

தனிப்பட்ட முறையில் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் தொடர்பில் தினமும் ஐந்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று குற்றப்புலனாய்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போதுமான சட்டங்களோ, வசதிகளோ இல்லை என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் பல்வேறு நபர்களைஇலக்குவைத்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இணையத்தள விசாரணைப் பிரிவுக்கு அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன், அரசநிறுவனமானகணினி அவசரப் பிரிவுக்கு கடந்த நான்கு மாத காலத்தில் ஆயிரத்து 100 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லாமை பெரும் சவாலாக இருப்பதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

தற்போதுகாணப்படும்சட்டங்களுக்கு ஏற்ப, கடும் நடவடிக்கை எடுக்க முடியாமையே மற்றைய பிரச்சினையாகும்.

பொலிஸ் நிலையங்களில் இவ்வாறான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாமையால் அவை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தி

# திருகோணமலையில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!



திருகோணமலை, மே 26

மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தி திருகோணமலை மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு முன்னால் அப்பகுதிவாழ் மீனவர்களால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை பொது மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மீனவச் சங்க உறுப்பினர்கள், மீனவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டவர்கள் தெரிவிக்கையில்-



திருகோணமலையில் மீன்பிடித் தொழிலில் தடை செய்யப்பட்ட டைனமைட் எனப்படும் வெடி பொருளைப் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஒரு சிலர் ஈடுபட்டு வரு கின்றனர். இதனால் அன்றாடம் மீன்பிடித் தொழிலைப் பிரதான ஜீவனோ பாயமாக் கொண்டவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலை நிரந்தரமாகப் பாதிக்கும் டைனமைட் உள்ளிட்ட மீன்பிடி சாதனங்களைத் தடை செய்ய வேண்டும். மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். இந்த அழிவை உண்டாக்கும் சாதனங்கள் தொடர்பாக மீனவர்களுக்கு அறிவூட்டி, அவர்களைப் பாதுகாக்கும் சாதனங்களை அறிமுகப்படுத்த வேண்டும். மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்கும் கடமையை சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். -என்றனர். (ச)



## தொண்டர் ஆசிரியர் தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடல்!

கொழும்பு, மே 27

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கிழக்கு முதல்வர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இவர்களுக்கு இடையில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே கிழக்கு முதலமைச்சர் இந்த விடயத்தைப் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

இதன் போது, கிழக்கு மாகாணத்தில் உள்ள 445 தொண்டர் ஆசிரியர்களுக்கும் உடன் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, கல்வியமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராய்ச்சியை உடன் அழைத்த பிரதமர், தொண்டராசிரியர்களின் நியமன தாமதத்துக்கான காரணங்களைக் கேட்டறிந்தார். தொண்டர் ஆசிரியர்களுக்குத் தீர்வை வழங்கும் திட்டத்தில் கல்வி அமைச்சையும் இணைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கிழக்கு முதலமைச்சருக்குப் பிரதமர் பணிப்புரை விடுத்தார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களை கல்விச் சேவைக்கு இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும், தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கும் விடயத்தை மாகாண கல்வி அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கிழக்கு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், குறித்த காலப்பகுதிகளில் தற்போதைய கல்வி அமைச்சரான எஸ். தண்டாயுதபாணி, முன்னாள் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியமையால் அவர் உட்பட அவரது நிர்வாகத்தினர், தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் உண்மையாகவும், இலகுவாகவும் இந்த விடயம் தொடர்பில் செயற்படுவார்கள் என்றும் அவர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.





## கொம்மாதுறை பாடசாலையில் விபுலாநந்தரின் சிலை திறப்பு

சுவாமி விபுலாநந்தரின் 125 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு - கொம்மாதுறை விநாயகர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விபுலாநந்தரின் உருவச் சிலை நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி கலந்துகொண்டு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளின் உருவச் சிலையைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொ.சிவகுரு மற்றும் பாடசாலை சமூகத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

## வலயக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் திடீர் ரத்து

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.கே.எம்.மன்சூரின் இடமாற்றம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவர் தற்போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அம்பாறைத் தமிழரின் இருப்பு ஆபத்தான நிலைமையிலேயே!

### கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் எச்சரிக்கிறார்

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் தமிழர்களது இருப்பு ஓரளவுக்குத் தக்கவைக்கப்பட்டுள்ளது. ஆனால், அம்பாறை மாவட்டம் இன்று மிகவும் ஆபத்தான நிலைமையிலேயே உள்ளது.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.



புலம்பெயர்ந்து வாழும் டென்மார்க்கில் உள்ள அன்னை அறக்கட்டளை எனும் நிறுவனத்தின் ஊடாக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஐந்து பேருக்கு கறவை பசு மாடுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்து தான் இருந்தது. அப்போது மட்டக்களப்பு வடக்கு, மட்டக்களப்பு தெற்கு என்று இரு தொகுதிகளாக இருந்தது.

ஆனால் 1959 மற்றும் 1960 ஆம் ஆண்களுக்கு பின்பு தான் அம்பாறை மட்டக்களப்பில் இருந்து பிரிக்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பில் இருந்து பார்க்கின்ற போது அம்பாறை மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனை எமக்கு ஏற்படுகின்றது. ஏனெனில் இந்த நாட்டில் வாழும் தமிழர்களுடைய இருப்பை நோக்கினால், அவர்களது தொடக்ககால வரலாறு அம்பாறையை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

நாங்கள் பெரும்பாலும் எங்களை அபகரித்து கபளீகரம் செய்தவர்கள் பேரினவாதிகள் என்று கூறிவிடுகின்றோம். ஆனால் அவர்களையும் விட எங்களை கூடுதலாகக் கபளீகரம் செய்து அபகரித்தவர்களும் எதிரிகளாக காட்டிக்கொள்ளாவிட்டாலும், எதிரிகளையும் விட கொடூரமான செயலை செய்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்களை வெளிப்படுத்த முடியாவிட்டாலும், அவர்கள் யார் என்று எங்கள் மக்களுக்கு நன்கு தெரியும். அம்பாறை மாவட்டத்தில் பல கிராமங்கள் இருந்த இடமே இல்லாதளவுக்கு போயுள்ளமை அனைவரும் அறிந்ததே. -என்றார். (ச)

# திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத்தளம்; இரு நாடுகளுக்கும் இடையில் ரகசிய உடன்பாடு!

*லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு*



கொழும்பு, மே 27

திருகோணமலைத் துறை முகத்தை மையப் பகுதியாகக் கொண்டு அமெரிக்க கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்றும் இதற்கான இரகசிய உடன்பாடு இலங்கை - அமெரிக்க அரசுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றும் லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத் தளத்தை அமைப்பது குறித்து, இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருதரப்பு உடன்பாடு ஒன்று இரகசியமாகக்கையெழுத்திடப் பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் திருகோணமலையில் கடற்படைத் தளத்தை அமைப்பதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.

அதேவேளை, அமெரிக்காவிடம் இருந்து 400 மில்லியன் டொலர் செலவில் போர் விமானங்களையும் 300 மில்லியன் டொலரில் இராணுவத் தளபாடங்களையும் இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லாத இந்தச் சூழலில் எதற்காக போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்? பொது மக்களின் நிதியை எதற்காக வீணாகச் செலவழிக்க வேண்டும்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (க)

# மேலும் 3 ஆயிரம் ஏக்கர் காணி வடக்கு, கிழக்கில் விடுவிப்பு!



*அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்*

கொழும்பு, மே 27

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள மேலும் 3 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய கூட்டு அரசு பதவிக்கு வந்த பின்னர், வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசம் இருந்த 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப் பட்டுள்ளன.

மேலும், 3 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. - என்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலிய ஆளுநர் இல்லத்தில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு!



கொழும்பு, மே 27

ஆஸ்திரேலியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அந்நாட்டு ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் விசேட வரவேற்பு அளிக்கப் பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதியை ஆளுநர் சேர் பீற்றர் குறல்குறோவ் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.


21 மரியாதை வேட்டுக்கள் சகிதம் இராணுவ அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டு மிக உயரிய வரவேற்பு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டதுடன் இருநாட்டு தேசிய கீதங்களும் இதன்போது இசைக்கப்பட்டுள்ளன.

இருநாட்டு தேசிய கொடிகளாலும் ஆளுநர் இல்ல வளாகம் அலங்கரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வரவேற்பு வைபவத்தின் பின்னர் ஆஸ்திரேலிய ஆளுநரால் வழங்கப்பட்ட விசேட விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி மைத்திரி உள்ளிட்ட இலங்கைத் தூதுக் குழுவினர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# களனி உள்ளிட்ட ஆறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பு; அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை!

*சீரற்ற காலநிலை மேலும் சில நாள்களுக்கு நீடிக்கலாம்*



கொழும்பு, மே 27

ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடும் மழையுடனான காலநிலை காரணமாக, களு, நில், கிங் கங்கைகள் பெருக்கெடுத்துள்ளன.

அத்துடன், களனி கங்கையும் பெருக்கெடுக்கும் நிலையை அடைந்துள்ளதாக, நீர்வழங்கல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தாழ்நிலப் பகுதியில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக காலி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில், பாதுக்க பிரதேசம் நீரில் மூழ்கியுள்ளது. மட்டக்களப்பில் கடும் காற்றினால் பழுகாமம் உள்ளிட்ட பகுதிகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக மழையின் காரணமாக தெனியாய பகுதியில் 40 இற்கும் அதிகமான வீடுகளுக்குள் நீர் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்களை மீட்கும் நடவடிக்கையில் படையினர்**

நீரில் மூழ்கியுள்ள பிரதேசங்களில் இருந்து பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகளில் கடற்படையினரும், விமானப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிங்கங்கை பெருக்கெடுப்பால், காலி மாவட்டத்தின் நெலுவ, ஹபரகட மற்றும் மொரவக்க ஆகிய பகுதிகளும், யக்கலமுல்ல, அமதுவ, வல்பொல, நவலம, தவலகம போன்ற பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

**களுகங்கை பெருக்கெடுப்பு**

களு கங்கை பெருக்கெடுப்பால் களுத்துறை மாவட்டத்தின், பாலிந்த நுவர, புலத்சிங்கள, அகலவத்தை போன்ற பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன.

அத்துடன் இரத்தினபுரி, எல்பத்த, பெல்மடுல்ல, குருவிட்ட, கிரியெல்ல, அயகம, இங்கிரிய, புளத்சிங்கள, பாலிந்த நுவர, மில்லெனிய, பாதுக்க ஆகிய பகுதிகள் அதிக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கொலன்னாவ, பியகம, களனி, கடுவெல, தொம்பே, ஹன்வெல, பாதுக்க மற்றும் அவிசாவளை ஆகிய பகுதிகளில் சிறு வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை மேலும் சில நாள்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த 21 மணித்தியாலங்களில் தெற்கு மற்றும் சப்பரகமுவ மாகாணங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 196.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன் இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் கடும் மழை பெய்து வருகின்றது.

**புயல்காற்று வீசும்**

தென்மேற்கு பருவ மழை பெய்து வருவதால் மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளைகளில் புயல் காற்று வீசும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (க)

# சப்ரகமுவ பாடசாலைகளுக்கு விடுமுறை!

கொழும்பு, மே 27

தொடரும் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சப்ரகமுவ மாகாண கல்விச் செயலாளர் காரியாலயம் வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# முதலீடுகளை மேம்படுத்த விசேட செயலகம் விரைவில்!

கொழும்பு, மே 27

நாட்டின் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு விசேட செயலகம் ஒன்று உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முதலீடுகளைக் கொண்டுவரும் நிறுவனங்களுக்கு இடையில் இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் பத்து தொழில்நுட்ப செயலணிகள் உருவாக்கப்பட உள்ளன.

முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு இடையில் நிலவி வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பணிகளை செயலகமும் செயலணிகளும் மேற்கொள்ள உள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

இலங்கைக்கு நிகரான நாடுகள் மேற்கொண்டு வரும் முதலீட்டு ஊக்குவிப்பு தந்திரோபாயங்களை ஆராய்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த யோசனைத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு நிர்வாக அதிகாரமே முதலில் தேவை

## வலியுறுத்துகிறார் திலக்ராஜ் எம்.பி.



மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரத்துக்கு முன்னதாக நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக்ராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பகிர்வின் ஊடாக அரசியல் அதிகாரத்தைப் பெறப் போராடுகின்றனர்.

மலையக மக்களுக்கும் அதே தேவை இருக்கின்ற போதும், நிர்வாக அதிகாரம் இல்லாத நிலையிலேயே இந்த தப்போராட்டம் இடம்பெறுகிறது.

எனவே, அரசியல் அதிகாரத்துக்கு முன்னதாக மலையக மக்களுக்கு நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

அதேநேரம், மலையகத் தமிழர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் என்று அந்தஸ்து கிடைக்கப்பெற வேண்டும்.

தற்போது சனத்தொகைக் கணக்கெடுப்பிலும் இந்தியத் தமிழர் என்றே மலையக மக்கள் குறிப்பிடப்படுகின்றனர். -என்றார். (எ)

# தினசரி ராசி பலன் 27.05.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 13 ஆம் நாள். துவிதியைத்திதி மாலை 5.31 மணி வரை. பின்னர் திருதியை. நட்சத்திரம்: மிருகசீரிடம் மாலை: 6.07 மணி வரை. பின்னர் திருவாதிரை. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 8.58 மணி முதல் 10.32 மணி வரை. சுபநேரம்: மாலை 2.52 மணி முதல் 4.22 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: வைகாசி மாதவளர்பிறை துவிதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு: மிருகசீரிடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்பமான நாள். அரச அதிகாரிகள் பதவி உயர்வுடன் விரும்பும் இடமாற்றமும் அமையப் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். வியாபாரிகள் சிறப்பானமுறையில் லாபமடைவார்கள்.

**ரிஷபம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாடுகளில் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** கவலையான நாள். பொருளாதாரம் நலிவுறும். அரச அதிகாரிகள் கடுமையான வேலைப் பளுவால் அவதிப்படுவார்கள். பதவி உயர்வு தள்ளிப்போகும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். பணவருவாய் அதிகரிக்கும். சிலருக்கு சிறப்பான வேலைவாய்ப்பு கிடைக்கும். வியாபாரிகள் பலமடங்கு லாபம் ஈட்டுவார்கள்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். குடும்பத்தில் சுபகாரியங்களால் அதிகமான விரயச்செலவுகளும் உண்டாகும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. எல்லாக்காரியங்களிலும் அமோகவெற்றி அடைவார்கள். வியாபாரிகள் அமோக லாபம் அடைவார்கள்.

**துலாம்:** யோசனையான நாள். அரச அதிகாரிகள் உண்மையாகப் பாடுபட்டாலும், வீண் பழிசுமத்தப்பட்டு பணி நீக்கம் செய்யப்படலாம். வியாபாரிகள் பெருத்த நஷ்டத்தை சந்திக்க நேரிடும்.

**விருச்சிகம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளால் கடன்பட நேரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**தனுசு:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். விரும்பிய பதவிகள் கிடைக்கும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தனவரவு அதிகரிக்கும். தொழிலில் ஏற்பட்டிருக்கும் போட்டி பொறாமைகளை மீறிச்சாதிப்பார்கள். வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** கவலையான நாள். பணவருவாய் குறையும். வீணான அலைச்சல்களால் வேதனைகள் வந்திடலாம். வியாபாரத்தில் கணிசமான முன்னேற்றம் உண்டாகும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. முயற்சிகளில் தடை உண்டாகும். நண்பர்களாக இருந்தவர்கள் பகைவர்களாக ஆவார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

சந்திராட்டம நாள்: உத்தராடம் 2,3,4ஆம் கால்கள் திருவோணம், அவிட்டம் 1,2ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அவசியம் நற்கருமங்கள் ஆரம்பிப்பதை விலக்குக.

# குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கையர்கள் 121 பேர் நாடு திரும்பினர்!

குவைத் சென்று தமது ஒப்பந்தம் முடிந்த பின்னரும் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட இலங்கையர்கள் 121 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரள தெரிவித்திருந்தார்.

எனவே, அவர்களைத் திருப்பி அழைக்கும் முயற்சிகளில் குவைத் தூதரகம் உதவி செய்திருந்தது.

2016 ஆம் ஆண்டு குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த ஆயிரத்து 324 பேர் திருப்பி அழைத்துவரப்பட்டிருந்தார்கள். 2015ஆம் ஆண்டு அழைத்துவரப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 800 இற்கும் அதிகமாகும். (எ)

# புதிய வரிச்சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி; நிறுவனங்களின் உண்டியல் பணத்துக்கு வரி

## ஜயந்த சமரவீர எம்.பி.கூறுகிறார்



கொழும்பு, மே 27

புதிய உள்நாட்டு வருமான வரிச் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் தொண்டு நிறுவனங்களின் உண்டியல்களில் விழும் பணத்துக்கும் வரி அறவிடப்பட உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை செயலிழக்கும் நிலைமைக்கு கொண்டு சென்று, அதனை தனியார்மயப்படுத்தும் நடவடிக்கை மூலம் மக்களுக்கு பெரும் வரிச்சுமை ஏற்படும்.

இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து எப்படியாவது நிறைவேற்றும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

புதிய உள்நாட்டு வருமான வரிச் சட்டத்தின் மூலம் வருடாந்தம் 5 லட்சம் ரூபா வருமானம் பெறும் தொழில் நிபுணர் ஒருவர் 5 லட்சம் ரூபாவுக்கு மேல் ஒரு ரூபாவை வருமானமாகப் பெற்றால், 4 – 24 வீதம் வரை வரி செலுத்த வேண்டி ஏற்படும். -என்றார். (எ)

# வவுனியா விபுலாநந்தா கல்லூரியில் நடைபெற்ற முதியோர் விழிப்புணர்வுப் போட்டி ஆரம்ப நிகழ்வு





வவுனியா, மே 27

சமூகசேவை அமைச்சின் கீழ் உள்ள முதியோர் செயலகம் அகில இலங்கை ரீதியில் முதியோர் விழிப்புணர்வுச் செயற்பாடாக பாடசாலை மாணவரிடையே கவிதை, கட்டுரை, ஓவியம், நடனம், சிறுகதை ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

இதன் ஆரம்ப செயற்பாடாக வவுனியா மாவட்டத்தில் வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியில் பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ. ஸ்ரீநிவாசன், மாணவர்கள் மத்தியில் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதன்போது மாணவர்கள் மூத்தோரின் வழிநடத்தலின் அவசியம், முதியோரின் விழுமியங்கள், பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, கதை, ஓவியம் போன்ற போட்டிகளை நடத்தி தேசிய ரீதியிலான பரிசுகளை வழங்குதல் தொடர்பாக மாணவர்களிடையே தெளிவுபடுத்தினார்.

முதியோர் தேசிய செயலகம் மூலம் அனுப்பப்பட்ட சுமார் 200 போட்டிக்கான அப்பியாசப் புத்தகங்களை மாவட்ட முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி ஜனுசியா பாலேந்திரன், அதிபரிடம் கையளித்தார்.

இந்தநிகழ்வில் மாவட்ட செயலக சமூகசேவை உத்தியோகத்தர் இராஜசேகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தரூபன், பாலேந்திரன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர். (எ-100)

கிருஷ்ணபிரியா



# அ.தி.மு.கவின் அடுத்த இளவரசி!

அ.தி.மு.கவின் இளவரசியை உங்களுக்குத் தெரியும். சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலாவோடு கைதாகி, பெங்களூர்சிறையில் இருக்கிறார். அடுத்த இளவரசியைத் தெரியுமா? அவர், கிருஷ்ணபிரியா. இளவரசியின் மூத்த மகள். 'போயஸ் ராணியாக இவர்தான் வரப்போகிறார்' என ஆளும் கட்சியின் அதிகார மையத் தில் வலம் வருபவர்கள் இப்போது சொல்ல ஆரம்பித்துள்ளனர்.

ஆட்சியிலும் கட்சியிலும் மிகமிக மேல் மட்டத்தில் இருக்கும் ஒரு சிலர் மட்டுமே அறிந்த முகம் இவர். அதிகம் அறியப்படாத முகமான இவருக்கு, அ.தி.மு.கவின் இளவரசியாக மகுடம் சூட்டிக் கொள்ள ஆசை பிறந்துவிட்டது என்ற தகவலால் ஒட்டுமொத்த சசிகலா உறவுகளும் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

### அடுத்த தலைவர்!

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட சசிகலா சிறையில் இருக்கிறார். சிறை செல்லுமுன் கட்சியை வழிநடத்த அவர் துணைப் பொதுச் செயலாளராக நியமித்த டி.டி.வி. தினகரனும் திகார் சிறையில் பிணைக்குக் காத்திருக்கிறார். 'சசிகலா குடும்பத்தைக் கட்சியைவிட்டு விலக்க வேண்டும்' என்று பன்னீர்செல்வம் அணி கோரிக்கை வைத்து வருகிறது. 'தினகரன் குடும்பத்தின் ஆதிக்கத்தை நாங்கள் ஏற்க மாட்டோம்' என்று எடப்பாடி பழனிச்சாமி அரசில் அமைச்சராக இருக்கும் சிலர் சொல்கிறார்கள். 'நான் அ.தி.மு.கவை விட்டு ஒதுங்கி விட்டேன்' என்று தினகரன் வெளிப்படையாகவே அறிவித்தார்.

இப்படிசசிகலாகுடும்பத்துக்கு வெளிப்படையான எதிர்ப்பு எழுந்திருந்தாலும், கட்சியும் ஆட்சியும் அந்தக் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றன. தினகரன் மௌனமாகிவிட்ட இந்த நேரத்தை இளவரசியின் குடும்பம் பயன்படுத்திக் கொள்ளத் துடிக்கிறது. அதுதான் இப்போது மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளது. அதாவது, சசிகலா குடும்பத்தின் கையிலிருந்து கட்சியைக் கைப்பற்ற இளவரசி குடும்பம் தயாராகிவருகிறது.

சசிகலாவின் அண்ணன் ஜெயராமன் - இளவரசி தம்பதியருக்கு இரண்டு மகள்கள். ஒரு மகன். மூத்த மகள்தான் கிருஷ்ணபிரியா. திருச்சியைச் சேர்ந்த கலியபெருமாளின் மகன் கார்த்திகேயன் தான் இவருடைய கணவர். ஜெயலலிதாவுக்குச் சொந்தமான ஹைதராபாத் திராட்சைத் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி ஜெயராமன் உயிரிழந்தார். அதன் பிறகு இளவரசி தனது பிள்ளைகளோடு போயஸ் கார்டனில்தான் வசித்து வந்தார். கிருஷ்ணபிரியாவும் திருமணத்துக்கு முன்புவரை போயஸ் கார்டனில் தான் இருந்தார். தற்போது கணவருடன் தனி வீட்டில் வசித்துவரும் கிருஷ்ண பிரியா, அதிகார ஆசையில் தனி ரூட் போடும் விவரத்தை அவருக்கு நெருக்கமானவர்களே நம்மிடம் விவரித்தார்கள்.

### சசிகலாவை மீறியது இளவரசி குடும்பம்!

'கிருஷ்ணபிரியா ஆரம்ப காலங்களில் போயஸ் கார்டனிலிருந்து, ஜெயலலிதாவின் நடவடிக்கைகளைப் பார்த்ததால் அவருக்கு அரசியல் மீதும், அரசுப் பதவி மீதும் ஒரு கண் இருந்துள்ளது. 2011 ஆம் ஆண்டுக்கு முன்புவரை இளவரசியின் குடும்பம் சசிகலாவுக்குக் கட்டுப்பட்டே இருந்துள்ளது. இளவரசியின் இரண்டு பெண்களுக்கும் திருமணம் முடிந்த பிறகுதான், இளவரசியும் ஒரு பவர் சென்டராக மாறத் தொடங்கினார். 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், இளவரசி கைநீட்டிய சில நபர்களுக்கும் சீட் வழங்கப்பட்டது. இளவரசிக்கு ஆலோசகராக அப்போது இருந்தவர், கிருஷ்ணபிரியாவின் மாமனார் கலியபெருமாள்.

2011 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, சசிகலா குடும்பத்தை ஜெயலலிதா ஓரம் கட்டினார். அப்போதும் இளவரசியை நீக்கவில்லை. போயஸ் கார்டனை விட்டு சசிகலா வெளியேற்றப்பட்ட போதும், இளவரசி போயஸ் கார்டனில் தான் இருந்தார். 'இனிமேல் நம்முடைய குடும்பத்தினருக்கு நல்ல நேரம்' என்று இளவரசி நினைத்தார். இளவரசியின் மகள் கிருஷ்ணபிரியா, மகன் விவேக் ஆகிய இருவரும் 'ஜெயலலிதாவுக்கு இனி எல்லாம் நாங்கள்தான்' என்ற ரீதியில் செயற்பட்டார்கள். ஆனால், சில மாத இடைவெளியில் மீண்டும் சசிகலாவின் கை கார்டனில் ஓங்கியது. அப்போதே, முதலில் உஷாராகிப் பணிவு காட்டியவர்கள் இளவரசி குடும்பத்தினர்தான். ஆனாலும், கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் குடும்பம் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தது.

### சமூக சேவகியான கிருஷ்ணபிரியா!

கிருஷ்ணபிரியா பொதுநலப் பணிகளில்தன்னைஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக 'கிருஷ்ணபிரியா ஃபவுண்டேஷன்' என்ற தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார். இந்த நிறுவனமே கிருஷ்ணபிரியாவின் உள் மனதில் இருந்த அரசியல் ஆசையை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ண பிரியாவின் இந்தத் தொண்டு நிறுவனம் குறித்த செய்தி ஒரு பத்திரிகையில் வந்ததைப் பார்த்த ஜெயலலிதா, இளவரசியைக் கூப்பிட்டு அந்தப் புத்தகத்தைத் தூக்கிப் போட்டாராம். 'தனியாக அரசியல் செய்யப் பார்க்கிறீர்களா? பெரிய சமூக சேவகியா உனது மகள்?' என்று டென்ஷன் ஆகி, சத்தம் போட்டாராம். அதன் பிறகும் தனது அறக்கட்டளை வேலைகளைத் தொடர்ந்தாலும், தன் பெயரோ, முகமோ வெளியில் வராமல் பார்த்துக்கொண்டார் கிருஷ்ணபிரியா.


### ஏமாந்த இளவரசி!

அக்கா கிருஷ்ணபிரியாவைப் போலவே அடுத்து அவர் தம்பி விவேக் தனது துடிப்பைக்காட்ட ஆரம்பித்தார். குழந்தைப் பருவம் முதலே போயஸ் கார்டனில் வளர்ந்தவர் விவேக். அதனால் அவரது ஒவ்வொரு வளர்ச்சியையும் ஜெயலலிதா அக்கறையோடு கவனித்து வந்தார். படிப்பு முடிந்த பிறகு விவேக்குக்கு என்று சொந்தமாகத் தொழில் வேண்டும் என்று ஜெயலலிதாவிடமும் சசிகலாவிடம் இளவரசி நெருக்கடி கொடுத்தார். அப்போதுதான் 'லக்ஸ் சினிமாஸ்' நிறுவனம் விவேக்கிடம் வந்தது. அதன் தொடர்ச்சியாக 'விவேக்குக்குக் கட்சியில் பொறுப்பு வேண்டும்' என்று இளவரசி கேட்டுள்ளார். ஆனால், 'விவேக் சின்னப் பையன். அவனுக்கு அரசியல் ஆசை ஏற்படுத்திக் கெடுத்துவிடாதீர்கள்' என்று ஜெயலலிதா சொல்லி வந்தார். விவேக் திருமணத்துக்கு ஜெயலலிதாவை வரவழைத்து, அவரை அரசியல் வாரிசு என்று சொல்ல வைப் பதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனால், விவேக் திருமணத்துக்கு ஜெய லலிதா போகவில்லை. இது இளவரசி குடும்பத்துக்கு ஏற்பட்ட பின்னடைவாகக் கருதப்பட்டது.

ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு, சசிகலாவிடம் பாசம் காட்டி அதிகாரத்தைப் பெற இளவரசியின் வாரிசுகள் முயற்சி செய்தார்கள். 'கட்சியின் பொதுச் செயலாளராக சசிகலா பொறுப்பேற்க வேண்டும்' என்று தினகரன், டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் கட்டாயப்படுத்தியபோது, அதை முதலில் வரவேற்றது இளவரசி குடும்பம்தான். அவர் பொறுப்புக்கு வந்தால்தான், அவரை வசப்படுத்தித் தாங்கள் அந்த இடத்தை அடைய முடியும் என்று இவர்கள் முடிவெடுத்தார்கள்.

### சிறைக்குச் செல்லும் முன் 'செக்'!

கிருஷ்ணபிரியாவின் அரசியல் ஆசைக்கு வடிவம் கொடுக்கப்பட்டது, சசிகலா சிறைக்குச் சென்ற பெப்ரவரி 16 ஆம் திகதிதான் என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். அன்று காலை போயஸ் கார்டனில் சசிகலாவுடன் அவரது குடும்ப உறவுகள் ஆலோசனை நடத்தியுள்ளார்கள். அப்போதுதான் டி.டி.வி.தினகரனைத் துணைப் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிப்பது என்று முடிவாகியது. அந்த ஆலோசனையில் இளவரசி குடும்பமும் பங்கேற்றுள்ளது. இளவரசி சிறைக்குச் செல்லும் முன்


சகோதரிகளுடன் விவேக்...

சசிகலாவிடம் கண்ணீர் மல்க சத்தம் போட்டிருக்கிறார். 'அம்மாவின் ஹைதராபாத் வீட்டைக் கவனிக்கப் போனதால் தானேஎன்கணவரைப்பறிகொடுத்தேன். உங்களுக்காகக் கையெழுத்துப் போட்டதால், இப்போது சிறைக்குப் போகப் போகிறேன். அரசியல் ரீதியாக என் குடும்பத்துக்கு நீங்க என்ன செய்திருக்கீங்க?' என இளவரசி அழுததும், சசிகலா அப்செட் ஆகிவிட்டாராம். அதன் பிறகுதான் சசிகலா, 'கட்சியைத் தினகரன் பார்த்துக்கொள்ளட்டும்... சொத்துகளை உங்கள் பொறுப்பில் வைத்துக் கொள்ளுங்கள். கார்டன் சாவியும் உங்கள் பொறுப்பில் இருக்கட்டும்' என்று சொல்லியுள்ளார். ஆனால், அதன் பிறகு வரிசையாக நடைபெற்ற ஆடுபுலி ஆட்டத்தில் இப்போது இளவரசி குடும்பத்தின் கையே முழுமையாக ஓங்கியுள்ளது.

### உமாபாரதி போல மாறிய கிருஷ்ணபிரியா!

தினகரன் இருந்தவரை கட்சியைப் பற்றி இளவரசி குடும்பத் தரப்பு அக்கறை காட்டவில்லை. ஆனால், தினகரன் சிறைக்குச் சென்ற பிறகு நிலைமை மாறிவிட்டது. சொத்துகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுபோல கட்சியையும் தங்கள் கைவசம் கொண்டு வர வேண்டும் என்று இளவரசியின் வாரிசுகள் கணக்குப் போட்டுள்ளார்கள். கிருஷ்ணபிரியா தனக்கு நெருக்கமானவர்களிடம் 'அத்தை (சசிகலா) இனி அரசியல் செய்வதற்கு வாய்ப்பில்லை. தினகரனுக்கு ராகு திசை இப்போது நடக்கிறது. அதனால், அவருடைய அரசியலும் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது. அதனால் இனி நான்தான் அரசியலில் இறங்கப் போகிறேன் என்று பிரகடனம் செய்துள்ளார்.

கிருஷ்ணபிரியாவின் சமீபத்திய நடவடிக்கைகள், அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன. கிட்டத்தட்ட ஒரு சாமியாரினிபோல பேசும் அவர், 'நான் தீட்சை வாங்கிவிட்டேன். மண்ணுக்குக் கீழே விளைந்த எந்தப் பொருள்களையும் சாப்பிடுவதில்லை' என்று சொல்லி வருகிறார். கழுத்தில் ருத்ராட்ச மாலை, முழுக்கை பிளவுஸ் என்று கிருஷ்ண பிரியாவின் தோற்றமே மாறியுள்ளது. 'நான் தமிழகத்தின் உமாபாரதி' என்று சொல்கிறாராம். தான் அரசியலுக்கு வருவதோடு, தன்தம்பி விவேக்கையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர என்ன செய் யலாம் என்ற ஆலோசனையிலும் கிருஷ்ணபிரியா ஈடுபட்டுள்ளார். சசிகலா குடும்ப உறவுகள் மத்தியில் நடராசன் பேச்சுக்கு எப்போதும் ஒரு மரியாதை இருக்கும். ஆனால், பிரியாவிடம் அது எடுபடவில்லையாம்.

### கணவர் கையில் மிடாஸ்... பிரியா கையில் பங்களாக்கள்!

மிடாஸ் மது உற்பத்தி நிறுவனம் முழுக்க முழுக்க கிருஷ்ணபிரியாவின் கணவர் கார்த்திகேயன் கட்டுப்பாட்டில் உள்ளது. மிடாஸ் வரவு செலவுகள் அனைத்தையும் கிருஷ்ணபிரியா பார்க்கிறார். நிதி முகாமையாளர் செல்வகுமார் வைத்ததே அங்கு சட்டம். மர்மதேசமாக இப்போது மாறியிருக்கும் கொடநாடு, அதிலுள்ள பங்களா அனைத்தும் இளவரசியின் இரண்டாவது மகள் ஷகிலா கட்டுப்பாட்டில் உள்ளன. இவருடைய கணவர் பெயர் ராஜ ராஜன்.

பையனூர், சிறுதாவூர் பங்களாக்களின் பிரதான சாவிகள் இப்போது பிரியா கையில் உள்ளனவாம். இப்படி சசிகலா பெயரிலும், ஜெய லலிதா பெயரிலும் இருந்த பல அசையா சொத்துகள் இப்போது பிரியா கட்டுப்பாட்டுக்கு வந்து விட்டனவாம். ஜெயலலிதாவின் கஜானாவே இப்போது பிரியா கைவசம் தான் உள்ளது. அதாவது, அவர்தான் இன்றைய அ.தி.மு.கவின் இளவரசி. நாளை மகாராணி!

'இப்போது எடப்பாடி ஆட்சியில் இருந்தாலும், ஆட்சி போனால் அவர்கள் கட்சியைவிட்டு ஓடிப்போய்விடுவார்கள். அப்போது கட்சியைக் காப்பாற்ற என்னால் மட்டுமே முடியும். கட்சியை நடத்தப் பணம் வேண்டும், அது என்னிடம் உள்ளது' என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கிருஷ்ணபிரியா கூறியுள்ளாராம்.

கிருஷ்ணபிரியா, ஷகிலா, விவேக்... இந்த மூவர் கூட்டணி மீது சசிகலா குடும்பத்தின் பிற உறவுகள் இப்போது ஏக கடுப்பில் இருக்கிறார்களாம். சசிகலாவால் மட்டுமே அவர்களைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், சசிகலாவே இளவரசியின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்.

சிறையில் சசிகலாவுக்கு வேண்டிய உதவிகளை விவேக்தான் கவனித்து வருகிறார். அதனால் இந்தக் குடும்பத்தின் கை ஓங்குவதைச் சசிகலாவால் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிகிறது என்றார்கள்.

எடப்பாடிக்கு எதிராக அணிதிரட்டும் எம்.எல்.ஏக்களுக்குப் பின்புலமாக இளவரசி குடும்பம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்போதும் கட்சியையும் கைப்பற்ற கிருஷ்ணபிரியா திகதி குறித்துக் களம் இறங்கிவிட்டார். அடுத்த ஆட்டம் ஆரம்பம்.



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 190


பொன்.வேணு கிருஷ்ணா

சமீப வாரங்களில் தோல்வியில் முடிந்த இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தி வட கொரியா சோதனை நடத்தியுள்ளது. மேலும் எந்த நேரத்திலும் தனது ஆறாவது அணு சோதனை நடத்தத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் தென் கொரியாவும் இணைந்து, சூப்பர்சொனிக் பிஒன்பி





என்ற லேன்சர் குண்டு வீச்சுத்திறன் கொண்ட விமானங்களைப் பயன்படுத்தி, இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டதை வடகொரியா கோபமாக கண்டித்துள்ளது. இது, அணுகுண்டுகளை வீசுவதற்கான ஒத்திகை நடவடிக்கை என்று வர்ணித்துள்ளது.

''கொரிய தீபகற்பத்தை அணு சக்தி யுத்தத்தின் விளிம்பிற்கு தள்ளும் விதமாக இந்த பொறுப்பற்ற இராணுவ முயற்சிகள் உள்ளன,'' என்று வட கொரிய அதிகாரி கே.சி.என்.ஏ. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

**தாட் ஏவுகணை என்றால் என்ன ?**

பாய்ந்து வரும் குறுகிய மற்றும் நடுத்தர அளவிலான பொலிஸ்டிக் ஏவுகணைகளை இயங்கும் நேரத்துக்கு முன்பு எதிர்கொண்டு தகர்க்கும் தன்மை கொண்டது.

200 கிலோமீற்றர் வரம்பில் 150 கிலோமீற்றர் உயரம் வரை சென்று தாக்கும்.

வட கொரியாவின் சாத்தியமான தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்கா முன்னதாக குவாம் மற்றும் ஹவாய் பகுதிகளில் தாட் ஏவுகணையை நிறுவியது.

**தாட் எவ்வாறு வேலைசெய்கிறது?**

எதிரி படை ஒப் ஏவுகணையை செலுத்தும்போது, தாட் ரேடார் அமைப்பு அதை கண்டறிந்துவிடுகிறது. கட்டளையிடப்பட்டு இயக்கப்பட்டதும் அது பறந்து சென்று எதிரியின் ஏவுகணையை எதிர்கொண்டு இயங்கும் முன்புமோதி அழிக்கிறது. தாட் ஏவுகணை தடுப்பு ரேடார் ஏவப்படும் வாகனத்தில் இருந்து ஒரே நேரத்தில் எட்டு ஏவுகணைகளை அனுப்ப முடியும்.

**அபூர்வ செயலாக சீனாவை விமர்சித்துள்ள வட கொரியாவின் அரசு ஊடகம்**

தங்களது பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதன் மூலம், சீனாவை விமர்சிக்கும் மிக அபூர்வநடவடிக்கையை வட கொரியாவின் அரச ஊடகம் எடுத்துள்ளது.

**சோதனைநடத்தியவடகொரியா**

வடகொரியாவால் அணுஆயுதச் சோதனை ஆபத்து இருப்பதாக சீன ஊடகங்கள் மிகைப்படுத்துவதாக, அரசால் நடத்தப்படும் கொரிய மைய செய்தி ஊடகம் (கே.சி.என்.ஏ) குற்றம் சாட்டியது.

இதனிடையே, வடகொரியாவில் ஆட்சி மாற்ற நடவடிக்கைகளை செய்வதற்குஅமெரிக்காமுயற்சிப்பதாக வடகொரிய தினசரியான மின்ஜூ ஜோசனில் பதிவான ஒரு கட்டுரை எச்சரித்துள்ளது.


**சீனா மீதான விமர்சனம்**

கே.சி.என்.ஏ கட்டுரையை, சீனா மீதான ஆபூர்வமான மற்றும் கடுமையான விமர்சனம் என்று அந்தப் பிராந்திய ஊடகங்கள் கூறியுள்ளன.

சீனா குறித்து நேரடியான மற்றும் அபூர்வமான கண்டனத்தை வடகொரியா தெரிவித்துள்ளதாக தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்பு, சீனாவை விமர்சிக்கும் போது ''அண்டை நாடு'' என்ற வார்த்தையை மட்டுமே வடகொரியா பயன் படுத்தும்.

பெப்ரவரி மாதத்தில், அமெரிக்காவின் தாளத்துக்கு ஏற்ப சீனா நடன




மாடுகிறது என்று கே.சி.என்.ஏ சீனா குறித்து குறிப் பிட்டது. ஆனால், அப்போது அண்டை நாடு என்று மட்டுமே சீனாவை கே.சி.என்.ஏ குறிப்பிட்டது.

சீன ஊடகங்கள், குறிப்பாக 'பீப்பிள்ஸ் டெய்லி' மற்றும் 'குளோபல் டைம்ஸ்' செய்தித்தாள்கள், கொரிய மக்கள் ஜனநாயக குடியரசு (டி.பி. ஆர்.கே) - சீனா உறவுகளை குறைத்து மதிப்பிடும் வகையில் பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவித்ததாக கே.சி. என்.ஏ மேலும் தெரிவித்தது.

கே.சி.என்.ஏ ஊடக வர்ணனைக்கு பதில் கொடுக்கும் வகையில், சீனாவின் தேசியவாத செய்தித்தாளான 'டெய்லி குளோபல் டைம்ஸ்' செய்தித்தாளில் வெளியான ஒரு கட்டுரை கருத்து தெரிவிக்கையில், ''வடகொரியாவுடன் பதிலுக்கு பதில் விவாதம் நடத்த வேண்டிய தேவை சீனாவுக்கு இல்லை'' என்று தெரிவித்தது.

''அதிகார நிலையிலோ அல்லது கீழ்மட்ட நிலையிலோ எதுவாக இருந்தாலும், தனது நிலைப்பாட்டை வடகொரியாவுக்கு சீனா மிகவும் தெளிவாக தெரிவிக்கவேண்டும். வடகொரியாவின் அச்சங்கள் குறித்து தனது நிலைப்பாட்டை சீனா எடுத்துரைக்க வேண்டும். ஆனால், அதே சமயம், மீண்டும் ஒருமுறை வடகொரியா அணு ஆயுதச் சோதனை நடத்தினால், முன்னெப்போதும் இல்லாத வகையில் சீனா நடந்து கொள்ளும் என்பதையும் சீனா வடகொரியாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும்'' என்று அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

**அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்தவட கொரிய ஊடககட்டுரை**

இந்த நிலையில், மின்ஜூ ஜோசனில் வெளியான அக்கட்டுரை, கொரிய மக்கள் ஜனநாயக குடியரசின் (டி.பி. ஆர்.கே) இராணுவத்தையும், மக்களின் சக்தியை தவறாக குறைத்து கணிக்க வேண்டாம் என்று அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்க வலைத்தளமான 38 நார்த்தை மேற்கோள் காட்டியுள்ள தென் கொரிய செய்தி ஊடகமான 'யோன்ஹாப்' ஊடகம், வடகொரியா அணுஆயுதச் சோதனை நடத்திய இடத்தில் தொடர்ந்து செயற்பாடுகள் இருந்து வருவதாகக் கூறியுள்ளது.

வடகொரியா அணுஆயுதச் சோதனை நடத்திய இடத்தில், சோதனை சுரங்கப் பாதையில் நீர் இறைப்பது மற்றும் சிலர் கரப்பந்து விளையாடுவது போன்ற நடமாட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்காணப்படுவதை அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படங்கள் காண்பித்துள்ளன.

**வட கொரியாவுக்கு கியூபா ஆதரவு**

அமெரிக்காவுக்கு எதிரான கூட்டு முன்னணியில், வடகொரியாவுக்கு கியூபா ஆதரவளித்துள்ளதை வட கொரிய அரச ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.



கொரியாவின் தொழிலாளர் கட்சிக்கும், அந்த நாட்டு மக்களுக்கும் அவர்களின் தர்ம போராட்டத்தில் கியூபா துணை நிற்கும் என்றும், அமெரிக்காவுக்கு எதிரான கூட்டு முன்னணியில் வடகொரியாவுக்கு துணையாக கியூபா செயற்படும் என்று கியூபாவின் தலைவர் ரால் காஸ்ட்ரோ தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதாக, நேற்று தனது ஆங்கில செய்தி அறிக் கையில் கே.சி.என்.ஏ தெரிவித்துள்ளது.

கடுமையான பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில், ராஜீய ரீதியாக வடகொரியா தனிமைப்படுவது கடுமையாக ஆகி வரும் சூழலை மாற்றும் முயற்சியில் , கியூபாவுடனான தனது உறவுகளை வடகொரியா சுட்டிக்காட்டுவதாக தென் கொரிய செய்தி ஊடகமான யோன்ஹாப் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, தலைநகர் பியோங்யாங்கில் உள்ள மங்கோலிய தூதரகத்தில் உள்ள அதிகாரிகளுடன் ஒரு நட்பு ரீதியான சந்திப்பை வடகொரிய வெளிநாட்டு அமைச்சகம் நடத்தியதாக கே.சி.என்.ஏ குறிப்பிட்டுள்ளது.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




158


## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

## சமஷ்டி வடிவங்களை ஆய்வு செய்வது

சுயநிர்ணய உரிமை பற்றிய எமது நிலைப்பாடு ˇவ்விதம் ஐ.நா. பிரகடனங்களுக்கும், சர்வதேச சட்டத்துக்கும் இசைவான முறையில் அமைந்துள்ளது என்பதை ஆழமாக அலசுவதற்கு முன்பாக, சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையில் ஒரு தீர்வை ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் எதற்காக இணங்கினோம் என்ற பின்னணியை யும் இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒஸ்லோவில் நிகழ்ந்த மூன்றாம் கட்டச் சுற்றுப் பேச்சுகளின்போது, இரு தரப்பினர்களுக்கும் ஆலோசனை வழங்குவதற்காக கனேடியக் கூட்டாட்சி மன்றத்தைச் சேர்ந்த நிபுணர்கள் குழு ஒன்றும் வந்திருந்தது. இவர்களில் முன்னாள் ஒன்ராறியோ பிரதமர் பொப் ரேய், ரொறன்ரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட் கமரோன்;, மன்ற நிர்வாகிகளில் ஒருவரான கார்ள் நரன்பேர்க் ஆகியோர் அடங்குவர். இந்த நிபுணர்களுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இரு சந்திப்பை நிகழ்த்தினார்கள். தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினக் கொள்கைப் பிரகடனமும், குறிப்பாக உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் விவாதத்தின் மையக் கருத்துக்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்யத் தயாரெனப் பிரபாகரன் கூறியிருக்கிறார் என மாவீரர் தின உரையிலிருந்து சம்பந்தப்பட்ட பந்திகளை வாசித்து நான் விளக்கமளித்தேன். தலைவரது நிலைப்பாட்டை வரவேற்றுப் பேசிய பேராசிரியர் டேவிட் கமரோன், ஆட்சியுரிமை மறுக்கப்பட்டு, ஒடுக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் இனம் என்ற ரீதியில்,தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்றும் அவர்களுக்குத் தன்னாட்சி உரிமை கோரும் தகைமையுண்டு என்றும் வாதித்தார். பேராசிரியர் கமரோன் மேலும் பேசுகையில், தன்னாட்சி, பிரதேச சுயாட்சி, (Self - Government, Regional Autonomy) போன்ற கருத்துருவங்கள் எமது கொள்கை விளக்கப் பிரகடனத்தில் செம்மையாக வரையறுக்கப்படாதமையால், அவை



தெளிவற்றவையாக இருக்கின்றன எனக் கூறினார். பேராசிரியர் கமரோனின் கருத்தை ஆதரித்துப் பேசிய பொப் ரேய், நவ உலகின் மெய்யுண்மைகளைத் தெளிவாகத் துலக்கிக் காட்டும் கருத்துருவங்களையும் கோட்பாடுகளையும் விடுதலைப் புலிகள் இயக்கம் உபயோகிப்பது அவசியம் என்றார். எமது கோரிக்கைகளையும் அரசியல் இலட்சியங்களையும் உலகத்தாருக்கு விளங்கப்படுத்தும் போது தெளிவாக வரையறுக்கப்படாத, பூடகமான சொற்பதங்களைப் பாவிப்பதைத் தவிர்ப்பது சாலச் சிறந்தது என்றார். ''சமகால உலகில் நடைமுறையில் இயங்கி வரும் ஆட்சியமைப்புகளைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக உங்களது கருத்துக்கள் அமைய வேண்டும். அப்படியென்றால்தான் உங்களது அமைப்பின் கொள்கைகளும் கோட்பாடுகளும் மற்றவர்களுக்குத் தெளிவாகப் புலனாவதுடன் சர்வதேச அங்கீகாரத்தையும் பெறும்.'' - என்றார் பொப் ரேய்.

'பிரதேச சுயாட்சி' என நாம் பாவிக்கும் சொற்பதம், சமஷ்டி வடிவிலான ஆட்சிமுறைக்கு இசைவானதாக இருக்கும் என்று கனேடிய கூட்டாட்சி மன்ற நிபுணர்கள் எமக்கு விளக்கம் தந்தார்கள். பிரதேச மட்டத்திலும் மத்தியிலும், சுயாட்சியும் பகிர்வாட்சியும் இணையும் இரு படிநிலை அரசாட்சிகளைக் கொண்டதாகச் சமஷ்டி ஆட்சி முறை அமையுமென்றும் அவர்கள் மேலும் தெளிவுபடுத்தினார்கள். உலகில் நிதர்சன வடிவம் எடுத்துள்ள மெய்யுண்மைகளைச் சிறந்த முறையில் சித்திரித்துக் காட்டும் கருத்துருவங்களைக் கையாளுவதன் அவசியத்தை ஏற்றுக் கொண்ட நான், சமஷ்டி ஆட்சி முறை பற்றி, சிங்கள அரசியல்வாதிகள் மிகவும் குளறுபடியான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறினேன். மாநிலங்களுக்கு இறையாண்மை அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, அதிகாரப் பரவலாக்கம் பற்றியே அவர்கள் சிந்திக்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டினேன். சமஷ்டி ஆட்சி முறையில் அதிகாரப் பரவலாக்கம் (Devolution of Power) என்ற பதத்தைப் பாவிப்பது தவறு என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டனர். உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், 'பிரதேச சுயாட்சி' என்பதற்குப் பதிலாக 'சமஷ்டிச் சுயாட்சி' என்ற பதத்தை பாவிப்பது உகந்தது அல்லவா எனக் கனேடிய நிபுணர்கள் வினவினார்கள். இது பற்றி ஓர் உறுதியான முடிவு எடுப்பதற்கு முன்னர், தற்போது உலகத்திலுள்ள பல ரகமான சமஷ்டி ஆட்சி வடிவங்களை ஆழமாக ஆய்வு செய்து பார்த்து, எமது பிரத்தியேகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆட்சி முறையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமென நான் விளக்கிக் கூறினேன். கனேடிய கூட்டாட்சி மன்ற நிபுணர்களுடன் நிகழ்த்திய கருத்துரையாடல்களின் அடிப்படையில்தான் பின்பு நானும் பேராசிரியர் பீரிஸுமாகச் சேர்ந்து கீழ்க்கண்ட தீர்மானத்தை வரைந்தோம்.

*''விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்த ஒரு யோசனைக்கு இசைவாக, உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கியமான இலங்கைக்குள், சமஷ்டி ஆட்சிமுறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.''*

இந்த வரிகளை ஊர்ந்து கவனிக்குமிடத்து, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டிச் சுயாட்சி



வடிவம் தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கே முடிவெடுக்கப்பட்டது என்பது நன்கு புலனாகும். இதனை மேலோட்டமாகப் பார்த்த அரசியல்வாதிகளும், ஆய்வாளர்களும், விடுதலைப் புலிகள் இயக்கம் ஏதோ சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் கைவிட்டு, சமஷ்டிக்குள் சறுக்கி விழுந்து விட்டதாகத் தவறான வியாக்கியானங்களைக் கொடுக்க முனைந்தனர். தற்கால அரசியல் அறிவுலகிலும் சர்வதேசச் சட்டங்களிலும் சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்கள் பற்றிய விவாதங்கள், தீர்மானங்கள் குறித்து ஆழமான பார்வை இல்லாத காரணத்தால் இவர்களிடமிருந்து இத்தகைய தவறான ஆய்வு விமர்சனங்கள் எழுந்தன. ஆகவேதான், சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்கள் பற்றிய இன்றைய கருத்தாடல் பற்றியும், இது சம்பந்தப்பட்ட எமது நிலைப்பாடு பற்றியும் இங்கு சுருக்கமாக விளக்க முனைகிறேன்.

### உள்ளக, வெளியக சுயநிர்ணய உரிமை

சுயநிர்ணய உரிமை என்பது வளர்ந்து வரும் ஒரு கருத்துருவம்; பரிணாமம் பெற்றுவரும் ஒரு கோட்பாடு. சர்வதேசச் சட்டத்துறையில் புத்தாக்கம் பெற்று வரும் ஒரு விதியாகவும், சர்வதேச மனித உரிமை நியமமாகவும் இது கொள்ளப்படுகிறது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது, ஆரம்பத்தில், மேற்குலக வல்லரசுகளின் குடியேற்றத்துக்கு அடிமைப் படுத்தப்பட்ட நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. பிரத்தியேகமாகக் குடியேற்ற நாட்டு மக்களின் அரசியல் சுதந்திரத்துக்கான தகைமையை நிர்ணயிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்பு இந்தக் கோட்பாடு புத்தாக்கம் கண்டது. இவ்வாண்டிலேயே ஐ.நாவில் ஒரு புதிய பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. 'அரசுகள் மத்தியில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் நிலை நாட்டுவது பற்றிய சர்வதேச சட்ட விதிகள்' என்ற ஐ.நா பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பிரகடனத்தில் சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு அந்தக் கோட்பாடு புதிய அர்த்த பரிமாணங்களைப் பெற்றது. 'சுயநிர்ணயமும் சம உரிமை விதிகளும்' என்ற தலைப்பில் இந்தப் பிரகடனத்திலுள்ள ஒரு விதி கீழ்க்கண்டவாறு கூறுகிறது:-

*''ஐ.நா. சாசனத்தில் பொறுக்கப்பட்டிருக்கும் சம உரிமைகளும் மக்களது சுயநிர்ணயமும் என்ற விதிக்கு இணங்க, எல்லா மக்களும், வெளிப்புறத் தலையீடு எதுவுமின்றி, தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கும், தமது பொருளாதார சமூக கலாசார வளர்ச்சியைப் பேணுவதற்கும் உரிமை உடையவர்களாவர். இந்தச் சாசனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய ஒவ்வோர் அரசும் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன.''*

(தொடரும்...)





# சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கருத்தரங்கு

வவுனியா பிரதேச செயலக ஊழியர்களுக்கு சமூகப் பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக அலுவலகர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா பொலிஸாரால் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் சமூகப் பிரச்சினைகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், வன்னிக்கான தமிழ் மொழி அவசர சேவை இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

# அரசியல் கைதிகளின் விவரம் கோரி கடிதம்

கொழும்பு, மே 27

இலங்கையின் சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளின் விவரங்களைக் கோரி, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.

தகவல் அறியும் சட்டத்துக்கு ஏற்ப தற்போது சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளின் விவரங்களை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரியுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு சென்ற இவர்கள் அமைச்சின் இணைப்புச் செயலாளரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தமது குடும்பத்துடன் இணைந்து மகிழ்சியாக வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இன்றும் நூற்றுக் கணக்கான அரசியல் கைதிகள் சிறையில் வாழ்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொய்களை நம்பி விடாதீர்கள்! இலங்கையரைக் கோரிய ஜனாதிபதி

கன்பரா, மே 27

அதிகாரத்தைஇழந்த குழுவை மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும் நோக்கத்துடன் சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். உண்மையை விட பொய்கள் வேகமாகப் பரவுகின்றன. எனவே பொய்களை நம்ப வேண்டாம் என்று உலகெங்கிலும் வாழும் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுக்கிறேன்என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆஸ்திரேலியாவுக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தில் கன்பரா நகரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் புலம்பெயர் இலங்கை சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், மாணவர்கள், தொழில்துறை சார்ந்தோர் உள்ளிட்ட பல தரப்பினர் கலந்து கொண்டார்கள்.

நாட்டு மக்களின் வாழ்க்கையில் சுபீட்சத்தை ஏற்படுத்த தெளிவான அபிவிருத்தி வேலைத்திட்டம் அமுலாகி இருக்கின்றது. மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி மீண்டும் யுத்தமொன்று ஏற்படாத வகையிலான சமாதானத்தைக்கட்டியெழும்பும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் சில கடும் போக்குவாதிகள் தாய் நாட்டுக்கு எதிராகப் போலி பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய நபர்களுக்கு எதிராக எதுவித தராதரத்தையும் பாராமல் சட்டத்தை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்றும் இந்த உரையில் ஜனாதிபதி கூறினார்.

தாய் நாட்டை நேசிக்கும் சகல இலங்கையர்களும் தமது நாட்டிற்கு உதவி செய்யமுன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு தெரிவித்தார்.

தமது அரசை ஆட்சி பீடத்தில் ஏற்றி மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை உச்ச பலாபலன்களைப் பெற திடசங்கற்பம் பூண்டுள்ளேன் என்றும் இதன்போது குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் விரும்பினார்கள். அவற்றை வலுவாகநிலைநாட்ட உறுதி பூண்டுள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தபால் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 27

பிரதான தபால் அலுவலகங்கள் கட்டடங்கள் பல சுற்றுலா ஹோட்டல்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன என்று ஒருங்கிணைந்த தபால் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு உள்ளிட்ட பிரசித்தி பெற்ற நகரங்களில் உள்ள பிரதான தபால் அலுவலகங்களை சுற்றுலா ஹோட்டல்களுக்குக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் எனவும் அந்தத் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# நாளை மின் தடை

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ் பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், கொடிகாமம் கச்சாய் வீதி, நெடுந்தீவு தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி-

பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில்வே கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி ரயல்வே கடவை வரை, முள்ளி, நாவலடி, பும்புகார், அரியாலை கிழக்கு, சீநோர் பவுண்டேஷன் லிமிட்டெட், மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார் கட்டு Carlton Sports Network (CSN), பனைவள ஆராச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்ஸர் பிளான்ட் ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தை பிரதேத்திலும் மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக்கண்டல், நிலாச்சேனை, வேட்டையன் முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், கள்ளணாட்டி, பரப்புக்கடந்தான் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடை ஏற்படும் என்று மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று மேலதிகமாக...

இதேவேளை -

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக -

இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் நெடுங்குளம், கருவேலப் புளியங்குளம், மகையா பருத்திக்குளம், அற்றம்பஸ்கொட, மாமடுவ, மகாகச்சக்கொடிய, பிரப்பன் காடு, நந்திமித்திரகம, சலலிங்கம, தாயல்கம, பொகஸ்வேவா, C.E.C கல்லுடைக்கும் ஆலை, மடுகந்த, இலங்கைத் தொலைத்தொடர்புக் கோபுரம், பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# தலைமன்னார் கடல் பகுதியில் சிக்கியது போதைப் பொருள்!

மன்னார், மே 27

தலைமன்னார் பகுதியில் பெருந் தொகையான போதைவஸ்து கொண்ட குளிகைகளும் ஒரு வகையான போதைப் பொருள் கொண்ட புகையிலைத் தூள்கள் போன்றவையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை இந்தியாவிலிருந்து கடத்தல் மூலம் கொண்டுவரப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து தென்கடற்கரையில் சோதனையிட்டபோது பெருந்தொகையானபோதைப்பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

அந்த இடத்திலிருந்து ஏழு பார்சல்களைக் கைப்பற்றியுள்ளனர் பொலிஸார். ரெமோட்டா என்று அழைக்கப்படும் ஒருவிதமானபோதைப் பொருளான குளிகைகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

ஒரு பெட்டியில் தலா ஆயிரம் வீதம் 29 பெட்டிகளில் 29 ஆயிரத்து 830 போதைப் பொருள் குளிகைகளும், சுமார் தலா 50 கிராம் கொண்ட 98 பொதிகளும் 30 கிலோ புகையிலைத் தூள் போன்ற ஒரு விதமான போதைப் பொருளுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவற்றை மன்னார் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-112)

## வெள்ளவத்தை கட்டட உரிமையாளருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, மே 27

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் உடைந்து விழுந்த மாடிக் கட்டடத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கட்டட உரிமையாளர் கடந்த 21 ஆம் திகதி பொலிஸில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு பின்னர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அந்த வழக்கு கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி நளின் டி. இந்திரதிஸ்ஸ முன்னிலையாகினார். வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெள்ளவத்தையில் கட்டடம் இடிந்து வீழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர், மேலும் 21 பேர் வரை காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளியோம்

### நாடாளுமன்றில் மனோகணேசன் சீற்றம்



கொழும்பு, மே 27

இலங்கையில் இனவாதம் தலைதூக்க இடமளிக்கப்போவதில்லை என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைகூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாத ரீதியான சம்பவங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் தகுதி தராதரம் பாராது சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி, அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் ஒரு பிரதேசத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால், அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

துறைக்குப் பொறுப்பான அமைச்சர் சாகல ரத்நாயக்க ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றமையை நான் அறிவேன். இது முஸ்லிம், தமிழ், சிங்களப் பிரச்சினை அல்ல.

இது தேசிய பிரச்சினை. இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். அதேசமயம் முஸ்லிம், சிங்களம், தமிழ் என பிரித்து பார்க்காமல் தேசிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

தேசிய பிரச்சினைகள் இருக்கின்றன. இதன் காரணமாகவே நாங்கள் அரசமைப்பு நடவடிக்கைக் குழுவை ஏற்படுத்தி பேச்சு நடத்தி வருகின்றோம். பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், சிக்கல்கள் இல்லை.

மோதிக்கொள்ள முடியாது, கொலை செய்ய முடியாது, தீவைக்க முடியாது. துப்பாக்கிச் சூடு நடத்த முடியாது. கடத்திச் செல்ல முடியாது.

எம்முடன் விளையாட வேண்டாம் என இனவாதிகளிடம் கூறுகிறோம்.

இலங்கையில் இனவாதிகள், வடக்கிலும் இருக்கின்றனர். தெற்கிலும் இருக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இனவாதிகள் இருக்கின்றனர்.


அவர்கள் அனைவரும் ஒரே மைத்துனர்கள். அவர்கள் ஒரே இனத்தவர்கள். எம்முடன் விளையாட வேண்டாம் என்று கூறி வைக்கின்றோம்.

நாட்டில் இனவாதம், அடிப்படைவாதம், பிரிவினைவாதம், பயங்கரவாதம், அரச பயங்கரவாதம் என அனைத்தும் துடைத்தெறியப்பட்டுள்ளன. இவை தலைதூக்க இடமளிக்க முடியாது.

வர்த்தகத்தில் ஈடுபடவும் சமய வழிபாடுகளில் ஈடுபடவும் தமது மொழியைப் பேசவும் கலாசாரத்தைப் பின்பற்றவும் நாட்டின் பிரஜைகளுக்கு உரிமை உள்ளது.-என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு காணிப் பிரச்சினை தீர்வு காண விசேட வேலைத்திட்டம்!

### புதிதாக நியமனம் பெற்ற கையோடு அமைச்சர் கயந்த



கொழும்பு, மே 27

வடக்கு - கிழக்கு காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண விசேட வேலைத்திட்டங்கள் வகுக்கப்படும் என்று காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் அமைச்சரின் நாடாளுமன்ற அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணி அமைச்சைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் நான் பெருமை கொள்கிறேன். இந்த அமைச்சின் மூலம் நாடெங்கும் சென்று மக்களுக்கு சேவையாற்றக் கூடியதாக இருக்கும்.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணிப் பிரச்சினை காணப்படுகின்றது. அவற்றைத் தீர்ப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

அந்தவகையில், நான் பதவியை பொறுப்பேற்றவுடன், முதலாவது பணியாக வடக்கு - கிழக்கில் காணப்படும் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண விசேட வேலைத்திட்டங்களை வகுக்கவுள்ளேன். -என்றார். (எ)

## லண்டனிலிருந்து தருவிக்கப்பட்ட பொதியில் ரூ. ஒரு கோடி பெறுமதியான போதைப்பொருள்

கொழும்பு, மே 27

லண்டனிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்பட்ட ஒருகோடியே இருபது லட்சம் ரூபாபெறுமதியானபோதைப் பொருள் சுங்கப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஜேர்மனியப் பிரஜை ஒருவர் லண்டனில் இருந்து கப்பல் மூலம் பொதி ஒன்றை இலங்கைக்குத்தருவித்திருந்தார். அந்தப் பொதியில் தனிப்பட்ட பொருள்கள் அடங்கியுள்ளன என்று அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், நேற்றுமுன்தினம் அந்தப் பொதி காலியில் உள்ள தனியார் சுங்கப் பரிசோதனை மையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அதற்குள் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

55 கிராம் எடை கொண்ட கொகேயின் மற்றும் 3 ஆயிரத்து 500 போதை மாத்திரைகள் என்பன அந்தப் பொதியிலிருந்து சுங்கப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாஎன்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## முஸ்லிம் அரச பாடசாலைகளுக்கு நேற்றுமுதல் ரம்ழான் விடுமுறை

கொழும்பு, மே 27


நாட்டிலுள்ள முஸ்லிம் அரச பாடசாலைகள் புனித ரம்ழான் விடுமுறைக்காக நேற்று முதல் மூடப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் முஸ்லிம் பாடசாலைகள் நேற்று முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

இதேவேளை அட்டாளைச் சேனைக் கல்வியியல் கல்லூரி, தர்ஹாநகர் கல்வியியல் கல்லூரி, அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி என்பன நேற்று முன் தினம் முதல் மூடப்பட்டுள்ளன என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

# இலங்கையுடனான பல்துறை உறவை மேலும் வலுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும்!

### ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஆஸி.பிரதமர்



பல்வேறு துறைகளில் இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஆஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், அந்த நாட்டுப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கன்பராவிலுள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன் போதே ஆஸ்திரேலிய பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கூட்டு பிரகடனம், புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் வகையிலான விருப்பு கடிதம் ஆகியனவும் இதன் போது கைச்சாத்திடப்பட்டன.

இரு நாடுகளிடையிலான விரிவான ஒத்துழைப்பு அந்தக் கூட்டுப் பிரகடனத்தில் இரு நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர்களும் கையெழுத்திட்டனர்.

அத்துடன், நாள்பட்ட சிறுநீரக நோயைத் தடுப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஆஸ்திரேலிய அணுசக்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும், நீண்டகால சிறுநீரக நோய் தடுப்புக்கான இலங்கை ஜனாதிபதி செயலணிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. (எ)

நினைவு இல்லம் என்ற பெயரில்

# போயஸ் தோட்டத்தை அபகரிக்கத் திட்டம்!


தீபா சாடல்

நினைவு இல்லம் என்ற பெயரில் புரட்சித் தலைவி ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் தோட்ட இல்லத்தை அபகரிப்பதற்கு சதிகாரர்கள் முயற்சித்து வருகின்றனர் என எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவையின் பொதுச் செயலாளர் ஜெ.தீபா குற்றம் சாட்டியுள்ளார்.

போயஸ் தோட்ட இல்லத்தை நினைவு இல்லமாக மாற்ற அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.,

அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அத்தைக்காக நான் அவர்கள் வழியில் மக்களுக்காக பணியாற்றுவேன். நானும் என் சகோதரர் தீபக்கும் மட்டும் தான் அனைத்துச் சொத்துக்களுக்கும் முறையான சட்டப்பூர்வமான வாரிசுகள். எங்களிடம் முறையாகவோ, சட்ட ரீதியாகவோ அனுமதி பெறாமல் போயஸ் தோட்ட இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றுகின்றமை சட்டரீதியான முறைகேடாகும்.


என் அத்தைக்கு சொந்தமான, அனைத்து பூர்வீகச் சொத்துக்களையும் முறைப்படி பராமரிக்கும் உரிமை முழுமையாக எனக்கும், எனது சகோதரர் தீபக்குக்கும் மட்டுமே உள்ளது. என் அத்தையிடமிருந்து எல்லாவற்றையும் அபகரித்தவர்கள், 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்த தியாகத் தலைவியை மக்களால் காண முடியாமல் செய்தவர்கள், இப்போது இல்லத்தைக் காட்டி அனுதாபம் தேடுகிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் முறையாக அ.தி.மு.கவின் கோட்டையாக அந்தப் புனித இல்லத்தை கட்டிக் காப்பது எனது கடமையாகும். தற்போது உள்ள அமைச்சரவைக்கு இந்த நடவடிக்கை எடுக்கும் உரிமை எந்த அடிப்படையில் உள்ளது.

இந்தச் சதியை முறியடிக்க அ.தி.மு.க. தொண்டர்கள் உடனடியாக குரல் எழுப்ப வேண்டும். எடப்பாடி பழனிச்சாமி போன்றவர்கள் எங்களுக்கு சொந்தமான தார்மீக உரிமைகளைப் பறிக்க நினைப்பதை அ.தி.மு.கவின் உண்மையான தொண்டர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்.- எனக் குறிப்பிட்டுள்ளார். (ச)

# அனைத்து இந்தியர்களின் கனவுகளை பா.ஜ.க. அரசு நிச்சயம் நிறைவேற்றும்!

## அசாமில் மிக நீளமான பாலம் திறப்பு நிகழ்வில் பிரதமர் மோடி உறுதி



திஸ்பூர், மே 27

காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி முடக்கப்பட்டிருந்தது. பா.ஜ.க. ஆட்சியில் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. அனைத்து இந்தியர்களின் கனவுகளையும் பா.ஜ.க. அரசு நிறைவேற்றும்.

-இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஆட்சி அமைந்து 3 ஆண்டுகளின் நிறைவு விழாவையொட்டி அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே இந்தியாவின் மிக நீளமான ஆற்றுப் பாலத்தை அவர் நேற்று வெள்ளிக்கிழமை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றமையைக் காண்கிறேன். கடந்த 2003 ஆம் ஆண்டில் இந்தப் பாலத்தை கட்ட வேண்டும் என பிரதமராக இருந்த வாஜ்பாய்க்கு பா.ஜ.க. சட்டசபை உறுப்பினர் ஜெகதீஷ் கடிதம் எழுதினார். அதற்கு வாஜ்பாய் அனுமதி வழங்கினார்.

ஆனால், ஆட்சி மாறிய பின்னர் பாலப்பணிகள் கிடப்பில் போடப்பட்டன. தற்போது, வாஜ்பாய் அரசின் கனவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பாலத்துக்காக 50 வருடங்களாக மக்கள் காத்திருந்தனர். நாட்டின் கனவை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். இந்த பாலம் இரு மாநிலத்தின் வளர்ச்சியை இணைக்கிறது.

மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். கடந்த மூன்றாண்டுகளில் மத்திய அரசு எடுத்துள்ள ஸ்திரமான நடவடிக்கைகளால் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு கண்டுள்ளது. மத்திய அரசின் செயற்பாடுகள் தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறிய வெளியிடப்பட்டுள்ள 'நரேந்திர மோடி ஆப்' மூலம் பொதுமக்கள் தொடர்பு கொண்டு இந்த ஆட்சியைப் பற்றிய கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும்.- என்றார். (ச)

# தி.மு.கவின் 'முரட்டு பக்தன்' காலமானார்!



சென்னை, மே 27

தி.மு.கவின் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளரும் கருணாநிதியால் 'முரட்டு பக்தன்' என அழைக்கப்பட்டவருமான என்.பெரியசாமி உடல் நலக்குறைவால் தனது 78 ஆவது வயதில் காலமானார்.

கடந்த சில தினங்களாக சென்னை போரூர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாகத் தி.மு.கவின் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய அவர், தி.மு.க.வின் உயர்திட்ட குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டவர் ஆவார். 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலிகளில் வெற்றி பெற்று இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். 1996 ஆம் ஆண்டு நகராட்சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். (ச)

# சூர்யா உட்பட எட்டு நடிகர்கள் மீதான அழைப்பாணைக்கு இடைக்காலத் தடை!

பத்திரிகையாளர்களை இழிவாகப் பேசிய வழக்கில், நடிகர் சூர்யா உட்பட 8 பேர் மீதான அழைப்பாணைக்குச் சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளது.

மேற்படி வழக்கு, விசாரணை உதகை குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. விசாரணைக்குச் சம்பந்தப்பட்ட நடிகர்களை நேரில் ஆஜராக உத்தரவிட்டும், அவர்கள் ஆஜராகாமல் இருந்தனர் எனக் கூறப்படுகிறது. இதையடுத்து, நடிகர் சூர்யா, சத்யராஜ், விஜயகுமார், சரத்குமார், அருண் விஜய், விவேக், இயக்குநர் சேரன், நடிகை ஸ்ரீப்ரியா ஆகிய 8 பேருக்கும் உதகை குற்றவியல் நீதிமன்றம் கடந்த 23 ஆம் திகதி அழைப்பாணை பிறப்பித்து உத்தரவிட்டது.

இதனையடுத்து, அழைப்பாணையை ரத்துச் செய்யக்கோரி மேற்படி 8 நடிகர்களும் உதகை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். இந்நிலையில், அவர்கள் தாக்கல் செய்த மனுவை உதகை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. 8 பேரின் அழைப்பாணையை நீதிபதி செந்தில்குமார் ராஜவேல் உறுதி செய்தார். இந்நிலையில் உதகை நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உடனடியாக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி நடிகர்கள் சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதிகள் நடிகர்கள் 8 பேர் மீதான அழைப்பாணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடிகை புவனேஸ்வரி விபசார வழக்கில் கைது செய்யப்பட்டார். அப்போது புவனேஸ்வரி தனது வாக்குமூலத்தில் மேலும் சில நடிகைகள் விபசாரத்தில் ஈடுபட்டார்கள் என்று கூறினார் என சில ஊடகங்கள் அந்த நடிகைகளின் படத்துடன் செய்தி வெளியிட்டன. இதனால் சினிமா உலகில் பெரிய சர்ச்சை கிளம்பியது. நடிகர்கள் பத்திரிகையாளர்களுக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுப்பினர். நடிகர்கள் பலரும் பத்திரிகையாளர்கள் பற்றி கடுமையாக விமர்சித்தனர். இதையடுத்து, பத்திரிகையாளர்களை விமர்சித்த 8 நடிகர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் பத்திரிகையாளர்கள் சார்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தமிழ் உணர்வுள்ள எவரும் தமிழ்நாட்டை ஆளலாம்!



தமிழகத்தை தமிழனே ஆள வேண்டும் என்பதில்லை. தமிழ் உணர்வு உள்ளவராக இருக்கின்ற எவரும் தமிழ்நாட்டை ஆட்சி செய்யலாம் என நடிகர் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

காந்தி, நேரு, போஸ் என்ற பெயர் கொண்டவர்கள் எவ்வளவோ பேர் எங்கள் ஊரிலேயே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தமிழர்களா? என்னைப் பொறுத்தவரை நான் என்னை இந்தியனாகவே கருதுகிறேன்.

இந்தியாவின் சட்டதிட்டங்களை மதித்து நடக்கிறேன். ரஜினிகாந்த் அரசியலுக்கு வரக்கூடாது என்று கூற யாருக்கும் உரிமை இல்லை.- என்றார். (ச)

## பெரியசாமி மறைவை முன்னிட்டு தி.மு.க. துக்கம் அனுஷ்டிப்பு!

தி.மு.கவின் 'முரட்டு பக்தன்' என அழைக்கப்படும் என்.பெரியசாமியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் மூன்று தினங்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும் என தி.மு.க. தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

அதன்படி மூன்று தினங்களுக்கு தி.மு.க.வின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். அத்துடன், தி.மு.க. சார்பில் நடைபெறவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தினகரனின் பிணை மனு ஒத்திவைப்பு!



டில்லி, மே 27

அ.தி.மு.கவின் துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்ன விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள டி.டி.வி. தினகரன் பிணைகோரி தாக்கல் செய்திருந்த மனு நேற்று, வெள்ளிக்கிழமை டில்லி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரட்டை இலைச் சின்னத்தை பெற்றுக்கொள்வதற்கு, சாகத் தேர்தல் ஆணையகத்துக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றார் என பெங்களூரைச் சேர்ந்த இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவர் கைது செய்யப்பட்டார்.

அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் டி.டி.வி.தினகரன் டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, அவர் டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசுக்கு எதிராக தகவல் வெளியீடு; எகிப்தில் இணையத்தளங்கள் முடக்கம்

கெய்ரோ, மே 27

எகிப்தில் அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும், தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகச் செய்திகள் வெளியிட்டதாக கூறி கத்தார் நாட்டின் அல்-ஜசீரா செய்தி தொலைக்காட்சி சனல் உள்ளிட்ட பல ஊடக வலையத்தளங்களை எகிப்து அரசு முடக்கியது.

2013-ஆம் ஆண்டு இராணுவத்தால் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டு தடை செய்யப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு ஆதரவாக அல்-ஜசீரா தொலைக் காட்சி செயற்பட்டு வருவதாக எகிப்து அரசு குற்றம் சாட்டியுள்ளது.

அதையடுத்து, அந்த செய்தி தொலைக் காட்சி முடக்கப் பட்டது. மேலும், புலனாய்வுச் செய்திகளை வெளியிட்டு வந்த 'மதம்ஸர்' என்ற ஊடகமும் முடக்கப்பட்டது. (எ)

# ஈராக்கில் அப்பாவி மக்கள் 150 பேர் அமெ. விமானத் தாக்குதலில் பலி!

## ஒப்புக்கொள்கிறது இராணுவம்



வொஷிங்டன், மே 27

ஈராக்கில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளைத் தாக்குவதற்கு பதிலாக 105 அப்பாவி மக்களைக் கொல்ல நேரிட்டமை உண்மை என்று அமெரிக்க இராணுவம் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளது.

சர்வதேச அளவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் அதிகமானோர் உள்ள ஈராக் மீது அமெரிக்க ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்க தாக்குதலில் இருந்து தப்புவதற்காக ஐ.எஸ்.தீவிரவாதிகள் தங்களது முகாம்களில் அப்பாவிகளைச் சிறை பிடித்து வைப்பது வழக்கம்.

ஏனெனில், வான்வழி தாக்குதலின்போது அப்பாவிகள் இருக்கின்றமையைக்கண்டால் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்துவதில் சிரமம் ஏற்படும்.

இந்தநிலையில், கடந்த மார்ச் மாதம் மொசூல் நகரில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்க வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத்தாக்குதலின் போது ஐ.எஸ். தீவிரவாதிகள் வைத்திருந்த வெடிகுண்டுகள்வெடித்துச்சிதறியுள்ளன. இதன் விளைவாக, கட்டடம் சரிந்து விழுந்த போது கீழ் தளத்தில் சிறைப்பிடிக்கப் பட்டிருந்த அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

இதேபோல், நேற்று முன்தினமும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்திய போது 35 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்என்று அமெரிக்க இராணுவம் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளது.

அதேசமயம், ஈராக் அணு குண்டுகளைத் தயாரிக்கக் கூடாது என்றும், அணு குண்டுச் சோதனைகளை அமெரிக்க ஒருபோதும் அனுமதிக்காது என்று ஈராக்குக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

## பிலிப்பைன்ஸில் தொடர் மோதல்கள்; வீடுகளை விட்டு வெளியேறும் மக்கள்



மணிலா, மே 27

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்குமிடையிலான மோதல்கள் தொடர்கின்ற நிலையில் நேற்று நூற்றுக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பிலிப்பைன்ஸின் மராவி நகரில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் மேற்படி தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வன்முறை மராவி பகுதியிலிருந்துநூற்றுக்கணக்கான மக்களை வெளியேறுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக நகரத்துக்கு வெளியில் பாதுகாப்பான இடங்களை நோக்கி பொதுமக்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களால் இதுவரை பாதுகாப்புப் படையினர் 11 பேரும் தீவிரவாதிகள் 31 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## உங்கள் வெற்றியை உலகமே பேசுகிறது; பிரான்ஸ் ஜனாதிபதியை புகழ்ந்த ட்ரம்ப்!



பரிஸ், மே 27

பிரான்ஸின் புதிய ஜனாதிபதி மக்ரோனைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 'உங்கள் வெற்றி குறித்து உலகமே பேசுகிறது' என்று புகழாரம் சூட்டினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றபின் முதன் முறையாக சவூதி அரேபியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.


இதன் ஒருபகுதியாக பிரான்ஸுக்கு பயணம் மேற்கொண்ட ட்ரம்ப் அந்த நாட்டு ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோனை புரூசெல்ஸில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தில் சந்தித்துப் பேசினார்.

அப்போது, "உங்கள் வெற்றி பற்றியே உலகம் பேசிக் கொண்டிருக்கிறது, ஆச்சரியப்படும் வெற்றி இது" என்று பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாம் இருவரும் இணைந்து பேசுவதற்கு அதிகம் உள்ளன. தீவிரவாதம், பொருளாதாரம் பற்றிப் பேச வேண்டும்' என்று மேலும் குறிப்பிட்டார்.

ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாகத் தொடர்ந்த பேச்சில், வடகொரியா விவகாரம், உக்ரைன் மற்றும் சிரியா நாடுகள் பற்றி ஜனாதிபதிகள் இருவரும் பேசிக் கொண்டனர் என்று பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

## தாயாரைத் தொடர்புகொண்டு உருக்கமாக மன்னிப்புக் கோரிய பிரிட்டன் தாக்குதல்தாரி



லண்டன், மே 27

பிரிட்டனில் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் தீவிரவாதி தனது தாயாரைத்தொடர்பு கொண்டு மன்னிப்புக் கோரினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்செஸ்டர்நகரில் கடந்த திங்கள் இரவு சல்மான் அபேடி என்ற தீவிரவாதி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்குப்பின்னர்பொலிஸார் இது வரை 10 பேரைக் கைது செய்துள்ளனர்.

தீவிரவாதியின் தந்தை மற்றும் சகோதரர் ஆகிய இருவரும் தீவிரவாதஅமைப்புடன் தொடர்புடையவர்கள் என தகவல்கள் வெளியானமையைத்தொடர்ந்து அவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

லிபியாவில்இருந்த தீவிரவாதியின்தந்தை மற்றும் சகோதரரைபொலிஸார் கைது செய்த போது அவர்களுக்கு ஒரு திடுக்கிடும் தகவல் கிடைத்துள்ளது.

அதில், 'மான்செஸ்டர் நகரில் தாக்குதல் நடத்துவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் சல்மான் அபேடி தனது தாயாரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளான்.

தீவிரவாதியின் தாயார் அணு ஆயுதங்களை ஆராயும் விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார்.

தாயாரைத் தொடர்பு கொண்டபோது 'அம்மா.... என்னைமன்னித்துவிடுங்கள்' என்று உருக்கமாகப் பேசிய பின்னர் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று லிபிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஒரு வருடமாக தாக்குதல் நடத்துவது தொடர்பில் சல்மான் அபேடி திட்டமிட்டு வந்துள்ளான்.

இணையத்தளம் வழியாக வெடிகுண்டுகளை எப்படித் தயாரிப்பது, அவற்றை எப்படி வெடிக்க வைப்பது உள்ளிட்ட தகவல்களையும் அவன் சேகரித்து வந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## பிரேஸிலில் ஜனாதிபதிக்கு எதிராக 35 ஆயிரம் பேர் திரண்டு பேரணி

### அரச அலுவலகங்கள் சூறையாடல், தீக்கிரை



பிரேஸிலியா, மே 27

ஊழல் குற்றச்சாட்டு காரணமாக பிரேஸிலில் ஜனாதிபதியை இராஜினாமச் செய்ய வலியுறுத்தி நாட்டு மக்கள் 35 ஆயிரம் பேர் நேற்று பேரணியில் ஈடுபட்டனர். அமைச்சு அலுவலகங்கள் சூறையாடப்பட்டு அலுவலகங்களுக்கும் தீ வைத்தனர்.

பிரேஸில் ஜனாதிபதி மைக்கேல் டெமர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே அவர் பதவி விலக வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

ஆனால் அவர் பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் கொதித்தெழுந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் பிரேஸிலியாவில் நேற்றுமுன் தினம் மாபெரும் பேரணி நடந்தது. அதில் 35 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

அப்போது அரசு அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அலுவலகங்களுக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கினர். அலுவலகங்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டன. இதனால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. எனவே, கூட்டத்தை பொலிஸார்றப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். (எ)

# கத்துக்குட்டி அணிகளில் ஒன்றைப் போல் நுழைகிறோம் சம்பியன்ஸ் கிண்ணத்தில்!

## அஞ்சலோ மத்தியூஸ் தெரிவிக்கின்றார்




கொழும்பு, மே 27

சம்பியன்ஸ் கிண்ணத்தில் கத்துக்குட்டி அணிகளில் ஒன்று போல பிரவேசிக்கின்றோம். ஆனாலும் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது என்று இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணத் தொடரில் இணை சம்பியனாகியிருந்த இலங்கை அணி, அதனை அடுத்து வந்த ஆண்டுகளில் (2013 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இறுதியாக இடம்பெற்ற) ஒரு தடவை மாத்திரம் சம்பியன்ஸ் கிண்ண தொடரின் அரையிறுதி வரை முன்னேறியிருந்தது.

இம்முறை, இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் காணப்படும் குழுவில் இலங்கை அணி மோதுகிறது.

இலங்கை அணியின் தலைவரான மத்தியூஸ் இம்முறை தனது அணி கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாக அனைவராலும் கருதப்படாதமையை ஏற்றிருப்பினும், தமது அணிக்கு கிண்ணத்தை வெற்றி கொள்ளும் ஆற்றல் இருப்பதில் உறுதியாக இருக்கிறது என்றும் தனது நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து அணிகளையும் முழுமையாக எடுத்து பார்க்கும் போது, கடந்த மாதங்களில் நாங்கள் இங்கேயும், அங்கேயும் பல சிறு தோல்விகளையும் ஏமாற்றங்களையும் காண்பித்திருக்கின்றோம். உண்மையாக கூறப்போனால், யாருமே எமக்கு ஒரு வாய்ப்பைத் தர இருக்கவில்லை.

இந்தத் தொடரில் கத்துக்குட்டி அணிகளில் ஒன்று போல பிரவேசிக்கின்றோம். ஆனாலும், எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஏனெனில், இலங்கையிலும் இங்கிலாந்திலும் கடந்த நாளகளில் இந்தத் தொடருக்காக கடும் முயற்சிகளையும், பிரயத்தனங்களையும் மேற்கொண்டு உழைத்திருக்கின்றோம். அது எமக்குச் சிறப்பாக அமைந்திருந்தது.

ஆஸ்திரேலிய அணியுடனான பயிற்சிப் போட்டியில் நாம் நல்ல ஆட்டத்தை காட்டி விளையாடவிருக்கின்றோம். அதன் மூலம் எமக்கு நல்லதொரு பயிற்சி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

அனைத்து அணிகளும் முழுமையாக காணப்பட்டிருப்பினும், போட்டியின் நாளில் குறைந்தளவான தவறுகளைக் காட்டும் அணியே வெற்றி பெறும். அது இங்கிலாந்தாகவும் இருக்கலாம், இல்லை இலங்கையாகவும் இருக்கலாம் அல்லது வேறொரு நாடாகவும் இருக்கலாம். அனைவருக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆனால் ஒருவருடைய நிலைமை இதுதான் என்பதை எழுதிக்காட்டிவிட முடியாது.

அடுத்து நடைபெற இருக்கும் தொடர் அனைவருக்கும் எதிர்பார்ப்பும் பரபரப்பும் மிக்க தொடர் ஒன்றாக அமையும் என்பதிலும் நம்பிக்கையாக இருக்கின்றேன்.

ஆரம்ப அனுபவங்களை மாத்திரம் பிரயோகிக்கக் கூடிய அணிகளில் ஒன்றாகவே நாம் தற்போது இருக்கின்றோம். இங்கிலாந்தைப் பொறுத்தவரை நாம் சிறந்த தோர் ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தோம். முக்கியமாக, 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடரைக் குறிப்பிட முடியும். எனவே, நாங்கள் அதேபோன்று இம்முறையும் துளிர்விட்டு செயற்பட முயற்சிப்போம்.

எம்மிடம் இளம் வீரர்களைக் கொண்ட அனுபவம் குறைந்த அணி காணப்படுகிறது. சில வீரர்கள் ஏற்கனவே இங்கிலாந்தில் விளையாடிய அனுபவத்தையும் கொண்டிருக்கின்றனர். ஆனால், இருக்கும் அனைவரும் போட்டியின் போக்கை எத்தருணத்திலும் மாற்றும் ஆற்றல் மிக்கவர்கள். எம்மிடம் திறமை இருக்கின்றது. இனி அதனை வெளிப்படுத்தி எம்மை நிரூபிப்பது மாத்திரமே எஞ்சியிருக்கின்றது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

29 வயதான மத்தியூஸ், 2014ஆம் ஆண்டில் 3-2 என இங்கிலாந்திதை வீழ்த்தி சாதனை வெற்றி அடைந்த இலங்கை அணியில் அங்கம் வகித்த வீரர்களில் ஒருவராகக் காணப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை மீண்டும் பெற்றுக்கொண்டிருக்கும் நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மலிங்க, இலங்கை அணிக்கு இத்தொடரில், முக்கியமான ஒருவராக செயற்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது வரையில் முழுமையாக இருபதுக்கு 20 போட்டிகளில் மாத்திரம் விளையாடி வரும் மலிங்க, இத்தொடரை முழு உடற்தகுதியோடு களம் காண இருக்கிறார் என்றும் மத்தியூஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும், 33 வயதாகும் வேகப்பந்து வீச்சாளரான அவர், இவ்வகையான நீண்ட ஓவர்கள் போட்டியிலும் தொடர்ந்து சாதிப்பார் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் மத்தியூஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலிங்க முழு உடற்தகுதியுடன் காணப்படுகின்றார். அவரை வரும் போட்டிகளில் முழுமையாக உபயோகித்து செயற்படவிருக்கிறோம். அவர் கடந்த காலங்களில் 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளில் விளையாடாவிட்டாலும் அநேகமான ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடிய அனுபவத்தை வைத்திருக்கின்றமை எமக்கு மிகவும் உபயோகமானதாகக் காணப்படுகின்றது.

அதே போன்று, பயிற்சிகளிலும் அவர் சிறப்பாக செயற்படுகிறார். அவரும் தொடரில் எம்மைப்போன்று சாதிப்பதில் நம்பிக்கை வைத்தவராகவே காணப்படுகிறார். அவர் போட்டியின் வெற்றியாளராக அணியை மாற்றும் திறமை கொண்டவர் என்பது எம் அனைவருக்கும் தெரியும்.

அதனை கடந்த வருடங்களில் நிரூபித்தும் இருக்கிறார். தனியொருவராக இருந்து போட்டியை வெற்றியாக்கித்தரும் ஆற்றல் கொண்ட அவரின் விளையாட்டை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி சம்பியன்ஸ் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவுடன் மோதி தொடரை ஆரம்பிக்க முன்னர், சவால்மிக்க துணைக்கண்ட இரண்டு நாடுகளுடன் பயிற்சிப் போட்டிகளில் மோதுகின்றது.

யாரும் எதிர்பாராத வகையில் ஸ்கொட்லாந்து அணியுடனான பயிற்சிப் போட்டியொன்றில் படுதோல்வி அடைந்த இலங்கை அணி, அதற்கு பதில் கொடுக்கும் விதமாக இரண்டு நாள்களின் பின்னர் சிறப்பாகச் செயற்பட்டு அடுத்த போட்டியில் வெற்றி அடைந்திருந்தது. இதன் மூலம் இங்கிலாந்தின் நிலைமைகளை இலங்கை அணி பொருந்திக் கொண்டதையும் காணமுடிகிறது.


# தமிழ்நாடு பிரீமியர் லீக்: ஆலோசகராகிறார் முரளிதரன்!

சென்னை, மே 27

தமிழ்நாடு பிரிமீயர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த தொடருக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு கிடைத்தது.

இந்த வருடம் ஜூலை மாதம் இந்த தொடர் தொடங்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், தமிழ் நாடு பிரிமீயர் லீக்கில் இடம் பிடித்துள்ள வி.பி. திருவள்ளூர் வீரன்ஸ் அணி, இலங்கை அணியின் ஜாம்பவான் முத்தையா முரளிதரனை ஆலோசகராக நியமிக்கவுள்ளது.



இதுகுறித்து அந்த அணியின் உரிமையாளர் வி.பி. சந்திரசேகர் தெரிவித்தவை வருமாறு:-

முரளிதரன் திருவள்ளூர் வீரன்ஸ் அணியின் ஆலோசகராகச் செயல்படுவார்.

வீரர்களை வழிநடத்திச் செல்ல அனுபவமான வீரர் ஒருவர் எங்கள் அணிக்குத் தேவைப்பட்டார்.

முத்தையா முரளிதரன் கிரிக்கெட்டில் அதிக திறனைப் பெற்றவர். அவர் இதை சிறப்பாக செய்வார் என்று நாங்கள் நினைத்தோம். தொடர் முழுவதும் அவர் அணியுடன் இணைந்து இருப்பார் என்று எதிர்பார்க்கிறோம். ஒரு சர்வதேச கிரிக்கெட் ஜாம்பவான் மாநில லீக்கில் ஆலோசகராக ஒத்துக்கொள்வது சிறப்பானது.- என்று அவர் கூறியுள்ளார்.

# சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாட ஆவலாக உள்ளாராம் விராட் கோஹ்லி!



லண்டன், மே 27

நான் அணித் தலைவராக எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஐ.சி.சி. போட்டி தொடர் இது என்பதால் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் விளையாட மிகவும் ஆவலாக உள்ளேன் என்று வீராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி நேற்று முன்தினம் இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது.

அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே விராட் கோஹ்லி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த முறை நடந்த போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றோம். அதற்கு எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டமையே காரணம். மேலும் சுழற்பந்து வீச்சாளர்களும் வலுவாக இருந்தனர். தொடக்க வீரர்களும் நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்து இருந்தனர்.

இந்திய அணியில் உள்ள இளம் வீரர்கள் நன்கு முதிர்ச்சி அடைந்து உள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக மிகுந்த அனுபவத்தை பெற்று உள்ளனர். இந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியை விரும்புகிறேன். ஏனென்றால் இது சவால் நிறைந்த போட்டியாகும்.

ஐ.சி.சி. உலகக் கிண்ணப் போட்டியில் லீக் ஆட்டங்கள் இருக்கும். ஆனால், சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் லீக் ஆட்டம் இருந்தாலும் நீங்கள் அரை இறுதிக்கு முன்னேறுவீர்களா? இல்லையா? என்பதுதான் முக்கியம்.

கடந்த 2014 ஆம் ஆண்டு சுற்றுப்பயணத்தில் இங்கு நான் ஓட்டங்கள் குவிக்கவில்லை. அணிக்கு நல்ல பங்களிப்பை அளிக்கவில்லை. இந்த முறை வெற்றியைக் கைப்பற்ற விரும்புகிறேன். இது நான் சிறப்பாக செயற்பட உத்வேகமாக உள்ளது.

இங்கிலாந்து மண்ணில் சாதிக்க வேண்டும். அது எனது கிரிக்கெட் வாழ்க்கையில் திருப்திகரமான ஒன்றாக இருக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய அணியில் பின்வரிசையில் டோனி மீது அதிக சுமை இருந்தும் கடைசி கட்டத்தில் சரியாக ஒத்துழைப்பு இல்லாமல் அவர் முழு திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனது.

தற்போது கேதர் யாதவ், ஹர்த்திக் பாண்டியா ஆகியோர் பின்வரிசையில் நன்றாக விளையாடுவார்கள். பின்வரிசை வலுவாக இருப்பதால் டோனிக்கு நெருக்கடி குறைந்து இருக்கிறது.

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் கேட்டு இருப்பது ஏற்கனவே பின்பற்றும் நடைமுறைதான்.

அதைவிட, தலைவர் பதவியில் என்னுடைய மிகப்பெரிய ஐ.சி.சி. போட்டி தொடர் இது. இதனால் சம்பியன்ஸ் போட்டியில் விளையாட மிகவும் ஆவலாக உள்ளேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆஸியில் சாதனை படைத்தது இலங்கை பட்மிண்டன் அணி!



கொழும்பு, மே 27

ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட்டில் இடம் பெற்ற சுதிர்மான் கிண்ணத்துக்காக பட்மிண்டன் தொடரில் மூன்றாவது குழுவில் நடைபெற்ற, சீன மக்காவு அணியுடனான போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

உலகம் முழுவதிலிருந்தும் பட்மிண்டன் வீரர்கள் கலந்துகொள்ளும் சுதிர்மான் கிண்ணத்துக்கான சம்பியன்ஷிப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றது. ஒவ்வொரு சுற்றுப் போட்டியிலும் ஐந்து பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறுகின்றன. ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவு, ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவு உள்ளடங்கலாக இரட்டையர் கலப்பு பிரிவுகளில் இந்த போட்டிகள் நடைபெறுகின்றன. அணிகள் அடிப்படையில் வெவ்வேறு குழுக்களுக்கு பிரிக்கப்பட்டு குழு மட்டங்களில் நடைபெறும் இந்தப் போட்டிகளில், குழு மட்டத்தில் அணிகள் வெளிப்படுத்தும் திறமைகளின் அடிப்படையில் முதலிடத்தைப் பெறும் அணி பதக்கத்துக்காக போட்டியிடும். அதேநேரம் ஏனைய அணிகள் குழு மட்டத்தில் முன்னேறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும். அதற்குக் காரணம், ஒவ்வொரு வருடமும் குறைந்த திறமைகளை வெளிப்படுத்தும் அணிகள் புதிய அணிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஆரம்பக் கட்டத்தில் குழு மட்டப் போட்டிகளிலிருந்து குழு 3-பி பிரிவுக்குத் தகுதி பெற்றிருந்த இலங்கை பட்மிண்டன் அணி, குழு மட்டத்திலான வெற்றியாளரை தீர்மானிக்கும் சீன மக்காவு அணியுடனான போட்டியை எதிர்கொண்டது.

ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்திய நிலுக்க கருணாரத்ன, தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் இலங்கை அணி சார்பாக சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்டதோடு சீன மக்காவு வீரர் பெங் போங்புய்யை 21-17, 21-6. என்ற நேர் செட் கணக்கில் வெற்றியீட்டினார்.

அதேநேரம், மகளிர் ஒற்றையர் பிரிவில் வெங் சிய்யுடனான போட்டியில் திலினி ஹெந்தஹேவா 21-9, 21-7 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

அத்துடன், கவிந்தி சிரிமன்னகேயுடன் ஜோடி சேர்ந்த புவனேக்கா குணதிலக்க, இரட்டையர் பிரிவில் யு லிஔங் மற்றும் சின் கொங் ஆகியோருடனான போட்டியில் வெற்றியை பதிவு செய்து 3-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றனர். இந்த ஜோடி எவ்விதமான சவாலுமின்றி, போட்டியின் ஆரம்பத்திலிருந்தே சிறப்பாக விளையாடி சரியான தருணத்தில் போட்டியில் வெற்றியைப் பதிவு செய்திருந்தனர்.

# மைதானத்துக்கு வரும் ஒவ்வொரு ரசிகர்களும் பாதுகாக்கப்படுவார்கள்!

## ஐ.சி.சி. உறுதி



லண்டன், மே 27

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை மைதானத்தில் பார்வையிட வரும் ஒவ்வொரு ரசிகர்கள் மற்றும் வீரர்களும் சிறப்பாக பாதுகாக்கப்படுவீர்கள் என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவின் தலைவர் ரோனி பிளானகன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் மென்செஸ்டர் நகரில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல் காரணமாக சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் பாதுகாப்பில் உறுதியற்ற தன்மை காணப்பட்டது.

இந்த நிலையில், பாதுகாப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்பியன் கிண்ணத் தொடரை முழு பாதுகாப்புடன் நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். போட்டிகளை பார்வையிட வரும் ரசிகர்கள் மற்றும் விளையாடும் வீரர்களுக்கான முழு பாதுகாப்பை நாம் வழங்கத் தயாராகவுள்ளோம்.

மென்செஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் நாட்டின் பல பகுதிகளுக்கும் ஆயுதம் தாங்கிய இராணுவ அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நாட்டில் இன்னுமொரு தீவிரவாத தாக்குதல் இடம்பெறாது. அது மாத்திரமின்றி சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான உயர்தர பாதுகாப்பு வழங்கப்படும்.- எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இங்கிலாந்து அணியில் ரூனிக்கு இடமில்லை!

லண்டன், மே 27

உலக கோப்பை உதைபந்தாட்டப் போட்டிக்கான தகுதி சுற்றில் இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனிக்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை.

உலக கோப்பை உதைபந்து போட்டிக்கான தகுதி சுற்றில் இங்கிலாந்து அணி அடுத்த மாதம் ஸ்கொட்லாந்துடன் மோத இருக்கிறது. அத்துடன், பிரான்ஸுடன் நட்புறவு ஆட்டம் ஒன்றிலும் விளையாட உள்ளது.

இதற்கான இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனிக்கு இடம் வழங்கப்படவில்லை.

இதற்கு முன்னர் இடம்பெற்ற ஆட்டத்தின் போது காலில் ஏற்பட்ட காயத்தால் அவர் சேர்க்கப்படவில்லை. ஆனால், இப்போது முழு உடல்தகுதியை எட்டிய போதிலும் அணிக்கு அழைக்கப்படாதமை ஆச்சரியம் அளிக்கிறது.

31 வயதான ரூனி, தான் இங்கிலாந்து அணிக்காக அதிக கோல்கள் (53 கோல்கள்) அடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 91 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவிரவாகத் தொடர்ந்து கொட்டித்தீர்த்தமழையால் ஆறுகள், கால்வாய்கள் பெருக்கெடுத்து, உடைப்பெடுத்தோடும் அபாயம் மேலும் மோசமடைந்திருக்கின்றது. இதனால் உயிரிழந்தோர் மற்றும் பாதிப்புற்றோர் எண்ணிக்கை மிகமிக மோசமாக அதிகரிக்கும் என அஞ்சப்பட்டது.

இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, கொழும்பு, அம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களே மோசமான காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிக உயிரிழப்புகள் களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளன. அங்கு மட்டும் இந்தப் பேய் மழை, பெரு வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்குண்டு 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி மாவட்டங்களில் அடுத்த 48 மணித்தியாலயத்துக்கு மழை நீடிக்கும் என்று காலநிலை அவதான நிலையம் நேற்று மாலை அறிவித்தது.

புவத்கோகுப்பிட்டி, தெரணியகலை, எட்டியாந்தோட்டை, தெஹியோவிற்ற, பத்தேகம, யக்கலமுல்ல, நெலுவல, தவளம, புளச்சிங்கள, அகலவத்தை, வளலவிற்ற, பத்துரெலிய, கொட்டல்பொல, பபஸ்கொட, பிற்றலெத்ர, முலத்தியன, வலசமுல்ல, கட்டுவான பிரதேச மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியினால் நாட்டின் தென்மேற்குப் பிரதேசத்தில் கனமழையும் கடுங்காற்றும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ)

## வட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீற்றர் வரை அதிகரிக்கலாம் என யாழ். மாவட்ட வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் கடலுக்குச் செல்லும் மீனவர்களை அவதானமாக இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாகயாழ். மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதன் வேகம் மேலும் அதிகரிக்கலாம்.

இதனால் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் குறிப்பாக கடற்பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம்.

தரையில் சுமார் 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வரை இருக்கலாம். எனவே மீனவர்கள் கடலுக்கு செல்வதில் மிக மிக அவதானமாக இருக்கவேண்டும். – என அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (ம)

## கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடைத்து ஓடுகின்றன என் றும் இதனால் பெருஞ்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்சப்படுகின்றது.

களுகங்கை, களனி கங்கை, நில்வள கங்கை போன்ற ஆறுகளே எல்லை மீறி நீர்மட்டம் உயர்ந்து கரை கடந்து பாய்கின்றன.

இதனால் இந்த ஆறுகளின் இரு மருங்குகளிலும் வசிக்கும் பல்லாயிரக்கணக்கானோரை இடம்பெயருமாறு அதிகாரிகள் பணித்திருக்கின்றனர்.

## உண்மையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்றுக்காலைவல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் ஆழிக்குமரன் ஆனந்தனின் நினைவாக நிர்மாணிக்கப்படும் நீச்சல் தாடகத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

சுமார் ஏழரைக் கோடி ரூபா செலவில் அமையவுள்ள இந்த நீச்சல் தடாகத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நிதி, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆழிக்குமரன் ஆனந்தன் நிகழ்த்திய உலகசாதனை குறித்தெல்லாம் முதலமைச்சர் தமது உரையில் விலாவரியாக எடுத்துரைத்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :–

இன்றைய இந்த நிகழ்வு சிறப்பாகவும் அந்நியோன்னியமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எம்மிடையே வேற்றுமை இல்லை. மாறாக சிந்தனைத் தெளிவு உண்டு.

இந்த நாட்டின் இனங்களுக்கிடையே காணப்படுகின்ற வேற்றுமை உணர்வுகளும் சச்சரவுகளும் அரசியல்வாதிகளாலும் பிற்போக்கு சிந்தனையாளர்களாலும் விதைக்கப்பட்ட ஒரு நச்சு விதையாகும். இதனை இல்லாதொழிப்பதற்கு அரசு முன்வரவேண்டும். அது இந்தக் கூட்டுக் கட்சி அரசாங்கத்தினால்தான் முடியும். இதற்காக நாம் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதனை முன்னெடுக்க வேண்டும். தவறான சிந்தனைகள் மாறினால் நாட்டின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். – என்றார். (உ)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச தேடுதல் மற்றும் மீட்பு ஆலோசனைக் குழு, அயல் நாடுகள் ஆகியவற்றின் அவசர உதவியை வெளிவிவகார அமைச்சு மூலம் இலங்கை அரசு கோரியுள்ளது. (உ)

## போக்குவரத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறு படகு கள் மூலம் மக்களின் அசைவியக்கம் நடைபெறுகின்றது.

பல நகரங்களின் பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

மூடப்பட்ட வீதிகள், ரயில்பாதைகள் குறித்து நீண்ட பட்டியல்கள் தெற்கில் வெளியிடப்பட்ட வண்ணம் இருந்தன.

பல இடங்களில் பாரிய மரங்கள் வீதிகளுக்குக் குறுக்காக வீழ்ந்து கிடப்பதாலும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பல ஆறுகள் கரையை மேவி தரைப்பாதைகள் வழியாகத் தடம் புரண்டு ஓடுகின்றன என்றும் கூறப்பட்டது. (உ)

## இனவாதமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறையின் சாதனையாளர் குமார் ஆனந்தன் ஞாபகார்த்தமாக அமையவுள்ள நீச்சல்குளத்துக்கான அடிக்கல்லைநாட்டிவைத்ததன் பின்னர் மக்கள மத்தியில் உரையாற்றிய அவர் –

இந்த குமார் ஆனந்தன், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்குப் பெருமை தேடித் தந்தவர். 1971ஆம் ஆண்டு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து இந்தியாவின் தமிழ் நாடுக்குச் சென்று மீண்டும் நீந்தி இலங்கையை வந்தடைந்தவர். இவரின் சாதனை உலகசாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்தது.

கிரிக்கெட் விளையாட்டு வீரர்களான குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன் போன்றவர்களைபோன்று, இப்படிப்பட்ட ஒருவர் வல்வெட்டித்துறையில் இருந்து சாதனை படைத்திருக்கிறார். அவர் என்னுடைய சித்தப்பா என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நம் மத்தியில் இன நல்லிணக்கம் முக்கியமானது. இன்று நாட்டில் பலர் இனவாதக்கருத்துக்களைபேசுகின்றனர். சிங்கள இனவாதமோ, முஸ்லிம் இனவாதமோ, தமிழ் இனவாதமோ இல்லாத நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

பருத்தித்துறையையும் தெய்வேந்திரமுனையையும் இணைக்கும் பணியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

சாதனையாளர் ஆழிக்குமரன் குமார் ஆனந்தன், இன ஒற்றுமைக்கும் எடுத்துகாட்டாக திகழ்கின்றார். வல்வெட்டித்துறையில் வடக்கில் பிறந்து, தெற்கில் திருமணம் முடித்து இன ஒற்றுமைக்கு வழிகோலியிருக்கின்றார்.

இலங்கையில் பிறந்து வளர்ந்த எனக்கு உங்கள் முன் தமிழில் பேச முடியாமைக்கு மனம் வருந்துகின்றேன். – எனத் தெரிவித்தார். (உ)

## கன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்த ஞானசார தேரரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

நான்கு பொலிஸ் குழுக்கள் இந்தத் தொடர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனவாம்.

## கன மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக மழை பொழியும் என வளிமண்டலவியல் அறிவித்தது.

நேற்றுக் காலை 9 மணியுடன் முடிவுற்ற 24 மணி நேரத்தில் களுத்துறை மாவட்டம் ஹொறணை, மிலகந்த பிரதேசத்தில் 615.1 மில்லிமீற்றர் மழை கொட்டியிருக்கின்றது.

அம்பாந்தோட்டை வீரக்கெட்டியவில் 495.5 மில்லிமீற்றரும் –

பட்டுவங்கல, பாதுக்கை, அவிசாவளைப் பகுதிகளில் 300 மில்லிமீற்றர் வரையும் –

மழை பொழிந்திருப்பதாகக் கூறப்பட்டது. (உ)

## பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரம் 11க்கான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்காக நாடு முழுவதுமிருந்து 93ஆயிரத்து 952 பரீட்சார்த்திகள் 658 நிலையங்களில் தோற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மாவட்டத்தில் நேற்று மூன்று கட்டடங்கள் திறந்துவைப்பு





மன்னார், மே 27

மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப்பொறியியலாளர் விடுதி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தனிநபர் விடுதி ஆகியன உள்ளிட்ட மூன்று கட்டடங்கள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்கு வீதிகளை இணைப்புத் திட்டத்தின் கீழ் 21 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மேற்படிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் பல அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## ஹெலிகொப்டரிலிருந்து வீழ்ந்த விமானப்படைச் சிப்பாய் காயம்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நெலுவ – துரிஹெல தோட்டத்தில் மக்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமானபடை வீரர் ஹெலிகொப்டரிலிருந்து கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

நபரொருவரை மீட்டு ஹெலிகொப்டரில் ஏற்ற முயற்சித்த போது அந்நபரும் விமானபடை வீரரும் கீழே விழுந்துள்ளனர்.

சுமார் 25 அடி உயரத்திலிருந்து இருவரும் நிலத்தில் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த இருவரும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

## தெற்கில் மீட்பு நடவடிக்கைக்கு 6 கவச வாகனங்கள் களத்தில்



கொழும்பு, மே 27

தென்னிலங்கையில் வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்காக பல படையணிகளும் களத்தில் குதித்துள்ள நிலையில், இலங்கை கவச வாகனப் படைப்பிரிவும் களத்தில் குதித்துள்ளது.

அதிக திறன் கொண்ட BTR ரக விசேட 6 கவச வாகனங்கள் மீட்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இக்கவச வாகனங்கள் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்களின் உடமைகளை மீட்பதற்கும் பேருதவி புரியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மீட்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மீட்பு நடவடிக்கைளில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். இராணுவத்தின் கனரக வாகனங்களும் மண்சரிவுப் பகுதிகளில் மண் அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இரண்டு பெல் 212 ரக ஹெலிகொப்டர்கள் உட்பட விமானப்படையின் 6 ஹெலியும் 28 மீட்பு அணிகளும் களத்தில் குதித்துள்ளன.

இலங்கைக் கடற்படையும் தனது விசேட மீட்பு அணிகளைக் களத்தில் இறக்கியுள்ளது. (உ)

## ஷீரடி சாய் நாதரின் உருவச்சிலை திறப்பு

கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஐங்கரன் மண்டபத்தில் நேற்று ஷீரடி சாய் நாதருடைய உருவச்சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் சாயி நாதனின் சரணாலய பெருவிழா இடம்பெறும் நிலையில் நேற்று மேற்படி உருவச்சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது. (ம)

# பிளாஸ்ரிக் பைகளைத் தவிர்ப்பதற்கான உறுதிமொழி வடக்குப் பாடசாலைகளில்!

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும், எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகளையும் ஒரு நாள் பயன்படுத்திவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருள்களையும் தவிர்ப்பதற்கான உறுதிமொழி நாளை மறுதினம் 29ஆம் திகதி திங்கட்கிழமை எடுக்கப்படவுள்ளது.

வடக்குச் சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சுற்றாடல் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையால் ஆண்டு தோறும் ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாகச் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.

சுற்றுச் சூழல் பற்றி உலகின் கவனத்தை ஈர்த்து, விழிப்புணர்வை ஏற்படுத்திச் சூழல் பாதுகாப்பில் அனைவரதும் ஆக்க பூர்வமான பங்களிப்பை வேண்டுவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

### நாளை மறுதினம் 29 ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது

இதையொட்டி, ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உலக சுற்றுச் சூழல் தினத்துக்கு முன்னரான, மே 29 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 4 ஆம் திகதி வரையான ஒருவார காலப் பகுதி தேசிய சுற்றுச் சூழல் வாரமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

தேசிய சுற்றுச் சூழல் வாரத்தின் தொடக்க நாளான மே 29 ஆம் திகதி காலை ஒன்றுகூடலின் போது சகல பாடசாலைகளிலும் இந்த உறுதிமொழி எடுக்கப்படவுள்ளது.

இந்த வகையில் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒரு நாள் பாவித்துவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருள்களைப் பயன்பாட்டில் இருந்து விலக்குவது தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சத்தியப் பிரமாணம் மேற்கொள்ள வடக்குச் சுற்றாடல் அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடுகள் செய்துள்ளது.

அன்றைய தினம், "பிளாஸ்ரிக் கழிவுகளால் இயற்கைச் சூழலுக்கும் மனித உடல் நலத்துக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டும், வருங்கால சந்ததிகளுக்கு ஆரோக்கியமான சுற்றுச் சூழலைக் கையளிக்கும் நோக்குடனும் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகளையும், ஒரு நாள் பாவனைக்கு உரிய பிளாஸ்ரிக்காலான குவளைகள், போசன விரிப்புகள், உணவுத் தட்டுகள், உணவுப் பெட்டிகள் ஆகியவற்றையும் இன்றில் இருந்து பயன்படுத்தவும் கொள்வனவு செய்யவும் மாட்டோம்" என்ற உறுதி மொழி சகல பாடசாலைகளிலும் எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு, பாடசாலை நிதியில் அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய சங்கங்களின் நிதியில் பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒருநாள் பாவனைக்குரிய பொருள்கள் கொள்வனவு செய்வதை முற்றாகத் தவிர்க்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.-என்றுள்ளது. (ஐ)

## தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு போதனாசிரியர் விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காய்ச்சி ஒட்டுபவர் (வெல்டர்), வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, கட்டட நிர்மாண உதவியாளர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர், வெளியிணைப்புப் படகு இயந்திரத் திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், தோல்பொருள் மற்றும் கைப்பை உற்பத்தியாளர் போன்ற கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் ஒரு அமர்வில் கணிதம் மற்றும் தமிழ் உட்பட சித்தியடைந்திருத்தல், குறித்த தொழிற்துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல், ஆகக்குறைந்தது ஒரு வருடம் உள்நாடு அல்லது வெளிநாட்டில் கற்பித்தல் அனுபவம் அல்லது பட்டம் இருத்தல், 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் ஆகிய தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்படி தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப்பணிப்பாளர், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல - 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## சமுத்திர பல்கலையில் தொழில் கற்கைநெறி

யாழ்ப்பாணம் மே 27

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டுக்கான தொழிற் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடலக வரைபடம் வாசித்தலும், செய் மதி தொடர்பாடலும் (ஜி.பி.எஸ்), கடலக மாலுமி பயிற்சி நெறி (NVQ - 4), உயர் பாதுகாப்புப் பயிற்சி நெறி (NVQ-4), மிதவைக் கப்பல் இயந்திரப் பொறிவலர் (NVQ-4), வெளி இணைப்பு இயந்திரப் பொறிவலர் (NVQ - 3), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் (NVQ - 4), ஆகிய கற்கைநெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு க.பொ.த.சாதாரணதரம் மற்றும் க.பொ.த.உயர்தரம் ஆகியனவற்றில் தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அனைத்துக் கற்கை நெறிகளும் கட்டணம் இன்றி நடத்தப்படும். கற்க விரும்புவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை 2 ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்று, ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலதிக விவரங்களை 0217388188 - 071 8349 073 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (க)

## திருமறைக் கலாமன்றத்தின் வண்ணப்பொழுது கலைநிகழ்வு

யாழ்ப்பாணம், மே 27

சிறுவர்கள் சமூக ஒருமைப்பாட்டின் முகவர்களாகிறார்கள் என்னும் கருப்பொருளில் திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு வரும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக திருமறைக் கலாமன்றத்தின் அனைத்து பிராந்திய மன்றங்களையும் சேர்ந்த பல்லின சிறார்கள் வழங்கும் கலை நிகழ்வுகளின் சங்கமம் வண்ணப்பொழுது இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கல்லூரி வீதி, இளவாலையில் அமைந்துள்ள இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலைக்களரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பல்லின சிறுவர்களின் நாடகம், நடனங்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### இன்று இளவாலையில்

இதேவேளை, திருமறைக் கலாமன்றத்தில் கடந்த ஒரு வருட காலமாக களிமண் சிற்பப் பயிற்சி நெறியை மேற்கொண்ட மாணவர்களின் சிற்புக் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.(ஐ)

## அராலியில் இன்று கண்சிகிச்சை முகாம்

வட்டுக்கோட்டை, மே 27

வட்டுக்கோட்டை, உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் அனுசரணையுடன் தந்தை செல்வா அறப்பணி மன்றத்தின் கொழும்புக் கிளையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி மத்தியில் அமைந்துள்ள சங்கத் தலைவர் வி.செல்வரத்தினத்தின் இல்லத்தில் கண்பரிசோதித்து இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.

பயனாளிகள் வரும்போது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சட்டவிரோத மீன்பிடி அதிகரிப்பு; முல்லை. தமிழ் மீனவர் பாதிப்பு!

### கண்டுகொள்ளாத அதிகாரிகள்

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு கடற்பரப்பில், சட்டவிரோத மீன்பிடி அதிகரித்துள்ளதால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் கடற்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் ஜனாதிபதி தொடக்கம், அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

கடலில் வெளிச்சம் போட்டு மீன் பிடிக்கக் கூடாது என்பது சட்டம். எனினும் முல்லைத்தீவு கடற்பரப்பு இரவு நேரங்களில் திருவிழா போன்று சட்டவிரோத மீன்பிடி இடம்பெற்று வருகிறது. அதனைத் தடுப்பதற்கு அதிகாரிகள் தவறி வருகின்றனர்.

சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## புற்றளை ம.வி புதிய கட்டட திறப்பு விழா இன்று

வடமராட்சி புற்றளை மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதித் திறப்பு விழா, இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, வித்தியாலய அதிபர் ஆறுமுகம் சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், சி.அகிலதாஸ் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

## கலைத்துறை சார்ந்தோர் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் இவ்வருடத்துக்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கலைக்கு விசேட சேவையாற்றிய 2017.12.15 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்திசெய்த நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் கலைஞர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுடைய கலைசார் விவரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# தெற்கில் மழை வெள்ளக்காட்சி...






















குமார் ஆனந்தன் நீச்சல் தடாகத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றைய தினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. 75 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள இந்த நீச்சல் தடாகத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ், சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## வெள்ளத்தில் சிக்குண்ட அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா

### மீட்க ஹெலி விரைந்தது



நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் மாத்தறைபிரதேசத்தில்ஏற்பட்ட பெரும்வெள்ளப் பெருக்கில் நிதி இராஜங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் அவரது மகனான தெற்கு மாகாண சபை உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் ஆபத்தில் உள்ளனர் என நேற்றுக் காலை தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது அவர்களின் வீடு 15 அடி அளவு நீரில் மூழ்கியுள்ளதாகவும், அவர்கள் தாங்கள் வீட்டின் மேல்மாடியில் உதவியை எதிர்பார்த்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் உயிரை காப்பாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சால் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஹெலிகொப்டர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் மாத்தறையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் பின்னரான காலப்பகுதியில் தற்போது தான் அங்கு பெரும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Architectural CAD Center
Presonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo
Auto CAD
2D-drawing & 3D Modeling
Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
University of Peradeniya
University of Moratuwa
Open University of Sri Lanka
University of Colombo
Link:0775116320-0718617972

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்தில் 27.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது